
பகவத் கீதை

கதைகள்



சிறியவர்கள் முதல் பெரியவர்கள் விரும்பும்
அறிவுப்பூர்வமான கதைகள்

பகவத் கீதை



விலை : ரூ. 20/-

வெளியீடு

ராஜேஸ்வரி
நோட் புக்ஸ்

995, நேரு ரோடு, பராசக்தி காலனி,

சிவகாசி – 626 123.

செல் : 9443818290

பொருளடக்கம்

1. ஸ்ரீ கிருஷ்ணர்

இந்த பூமியில் பாவம் செய்பவர்களை அழித்து, நல்லவர்களை பாதுகாப்பதற்காக மகாவிஷ்ணு கிருஷ்ணராகத் தோன்றினார். பகவான் மகாவிஷ்ணுவின் அவதாரம்தான் கிருஷ்ணர். ஆனால் கிருஷ்ணர் இந்த பூமியில் மனிதர்களைப் போலவே வாழ்ந்து வந்தார். இவர் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து யாதவர் குலத்தில் வளர்ந்து வந்தார். யாதவர்களுக்கு தலைவனாகவும் மதுரா தேசத்துக்கு அரசனாகவும் வாழ்ந்து வந்தார். இவருக்கு கண்ணன், வாசுதேவன், நாராயணன், ஜனார்த்தனன், பரமேஸ்வரன் என்று பல பெயர்கள் உண்டு. மகாபாரதப் போரில் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு கீதையின் தத்துவங்களை எல்லாம் கூறினார். ஆகவே பகவத் கீதை படிப்பவர்கள் முதலில் மகாபாரதக் கதையைத் தெரிந்துக் கொள்வது நல்லது. இந்த புத்தகத்தில் மகாபாரத கதையை சுருக்கமாக கொடுத்து இருக்கிறோம். ஆகவே முதலில் மகாபாரதக் கதையை படித்துவிட்டு அதைத் தொடர்ந்து பகவத்கீதையைப் படிக்கவும். நமது மனம் நல்ல நிலையில் இருக்கும் போது இதைப் படிக்கவும். கீதையைப் படிக்கும் போது நம் மனதில் வேறு சிந்தனைகள் இருக்கக்கூடாது. காலையில் குளித்துவிட்டு அமைதியான இடத்தில் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படிப்பது நல்லது.

ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாக புரிந்து கொள்ளும் வரை படிக்க வேண்டும். சிறுவர்கள் சிரமப்படக்

கூடாது என்பதால் வார்த்தைகளை தெளிவாக கொடுக்கப் பட்டுள்ளது. இதை விட எளிமையாக பகவத்கீதையை எழுத முடியாது.

இதை ஆர்வமுடன் நீங்கள் படித்தால் உங்கள் மனம் தெளிவடையும். நம்மைப் பற்றியும், இந்த உலகத்தைப் பற்றியும் நாம் தெளிவாக புரிந்து கொள்ளலாம். ஆகவே நீங்கள் ஒரு சிறந்த மனிதனாக வாழ்க்கையில் முன்னேறலாம்.

மகாபாரத கதை சுருக்கம்

2. பீஷ்மர்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது பாரத நாட்டை பரத வம்சத்தினர் ஆண்டு வந்தனர். அந்த பரத வம்சத்தில் ஒருவன் சந்தனு ராஜா. சந்தனுராஜாவிற்கு பீஷ்மர், சித்தராங்கநாதன், விசித்திர வீரியன் ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்தனர். கந்தர்வர்களுடன் ஏற்பட்ட ஒரு சண்டையில் சித்திராங்கநாதன் மரணம் அடைந்தான். பீஷ்மர் ஒரு மாபெரும் வீரனாக இருந்தார். அவர் தனது தந்தை சந்தனுவின் நன்மைக்காக ஒரு சபதம் எடுத்துக் கொண்டார். அதாவது நான் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்றும் அரச பதவியை வகிக்க மாட்டேன் என்றும் பீஷ்மர் சபதம் செய்துவிட்டார். ஆகவே சந்தனுவிற்கு பிறகு அவனின் மற்றொரு மகன் விசித்திர வீரியன் நாட்டை ஆட்சி புரிந்தான். அவர்களின் நாட்டு தலைநகர் அஸ்தினாபுரம் ஆகும். ஆகவே அஸ்தினாபுரத்து அரண்மனையில்

இருந்து கொண்டு விசித்திர வீரியன் நாட்டை ஆட்சி புரிந்தான். மேலும் ஒரு முறை பீஷ்மர் தனது சிற்றன்னைக்கும் ஒரு சத்தியம் செய்து கொடுத்தார். அதாவது ''நான் எப்போதும் அஸ்தினாபுரத்து அரண்மனையை விட்டு பிரியமாட்டேன் என்றும், அஸ்தினாபுரத்து அரசனுக்கு கட்டுப்பட்டு இருப்பேன்" என்றும் பீஷ்மர் சத்தியம் செய்து கொடுத்தார். ஆகவே பீஷ்மர் அஸ்தினாபுரத்து அரசனுக்கு ஆலோசகராக இருந்தார்.

பீஷ்மர் ஒரு மாபெரும் வீரன். எதிரிநாட்டு அரசர்கள் பீஷ்மரை கண்டு பயந்தனர். மாவீரன் பீஷ்மர் தான் செய்து கொடுத்த சத்தியத்திற்கு கட்டுப்பட்டு அஸ்தினாபுரத்து அரண்மனையில் வாழ்ந்து வந்தார்.

3. திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன்

அஸ்தினாபுரத்து அரசன் விசித்திர வீரியன் ஒரு நாள் திடீர் என்று மரணம் அடைந்துவிட்டான். ஆகவே அவனின் இரண்டு மனைவிகளுக்கும் வியாச முனிவர் பிள்ளை வரம் கொடுத்தார். அப்போது ஏற்பட்ட ஒரு குழப்பத்தால் ஒரு வேலைக்காரிக்கும் வியாசர் பிள்ளை வரம் கொடுத்து விட்டார். விசித்திர வீரியனின் ஒரு மனைவிக்கு திருதராஷ்டிரன் என்ற ஒரு மகன் பிறந்தான். விசித்திர வீரியனின் மற்றொரு மனைவிக்கு பாண்டு என்று ஒரு மகன் பிறந்தான். பிறகு வேலைக்காரிக்கு விதுரன் என்ற மகன் பிறந்தான். இந்த மூன்று குழந்தைகளும் வியாசரின் அருளால் பிறந்தது. ஆகவே இந்த மூன்று குழந்தைகளும்

அரண்மனையில் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தன. இதில் திருதராஷ்டிரன் என்ற குழந்தை பிறக்கும் போதே கண் தெரியாத குழந்தையாக இருந்தது. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் வரை பீஷ்மர் அரண்மனைக்கு பாதுகாப்பாக இருந்தார். திருதராஷ்டிரனுக்கு கண் தெரியாது என்பதால் அஸ்தினாபுரத்து அரசனாக பாண்டுவுக்கு முடிசூட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

4. பாண்டவர்களும் – கௌரவர்களும்

விசித்திர வீரியனுக்கு பிறகு பாண்டு மன்னன் அஸ்தினாபுரத்து அரசனாக ஆட்சி புரிந்தான். அப்போது கண்தெரியாத திருதராஷ்டிரனும் அரண்மனையில் சகல உரிமைகளுடன் அமர்ந்து இருந்தான். பெரிய அறிவாளியான விதுரன் அவர்களுடன் ஆலோசகராக இருந்தான். சில காலத்திற்கு பிறகு பாண்டுவிற்கு ஐந்து பிள்ளைகளும், திருதராஷ்டிரனுக்கு நூறு பிள்ளைகளும் பிறந்தனர். யுதிஷ்டிரன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐந்து பேரும் பாண்டுவின் பிள்ளைகள் ஆவர். இதில் பீமன் மிகப்பெரிய பலசாலி, அர்ஜுனன் வில்வித்தையில் சிறந்து விளங்கினான். பாண்டுவின் ஐந்து பிள்ளைகளும் பாண்டவர்கள் என்று அழைக்கப்பட்டனர். பாண்டவர்களின் மூத்தவன் யுதிஷ்டிரன் ஆவான். துரியோதனன், துச்சாதனன், விகர்ணன், விகடன், துர்முகன், நந்தன் முதலிய நூறு பேர் திருதராஷ்டிரனின் பிள்ளைகள். அந்த நூறு பேரும் கௌரவர்கள் என்று அழைக்கப் பட்டனர். கௌரவர்களில் மூத்தவன் துரியோதனன் இவனும் ஒரு மாவீரன்.

ஒரு சாபத்தின் விளைவாக பாண்டு மன்னன் திடீர் என்று மரணம் அடைந்துவிட்டான். அதன் பிறகு திருதராஷ்டிரன் அஸ்தினாபுரத்து அரசனாக ஆட்சி புரிந்து வந்தான். பாண்டவர்களும் அஸ்தினாபுரத்து அரண்மனையில் வாழ்ந்து வந்தனர். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் சிறு வயது முதல் விரோதம் வளர்ந்து வந்தது.

ஆகவே பாண்டவர்களுக்கு பாதி நாட்டை பிரித்து கொடுத்துவிடும்படி பீஷ்மர், விதுரன் முதலியவர்கள் கூறினார்கள். அவ்வாறே செய்வதாக திருதராஷ்டிரனும் ஒப்புக் கொண்டான். அதன் பிறகு இந்திர பிரஸ்தம் என்ற நகரை தலைநகராகக் கொண்டு பாண்டவர்கள் நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்து வந்தனர். இந்திர பிரஸ்தத்திற்கு பாண்டவர்களில் மூத்தவனான யுதிஷ்டிரன் அரசனாக இருந்தான். துரியோதனன் பாண்டவர்களின் மீது மிகுந்த கோபமும் பொறாமையும் கொண்டவனாக இருந்தான்.

துரியோதனனின் மாமா சகுனி ஆவான். துரியோதனனின் உயிர் நண்பன் கர்ணன் ஆவான். ஒரு முறை பாண்டவர்கள் அஸ்தினாபுரத்தில் சபையில் கர்ணனை தேரோட்டியின் மகன் என்று கூறி அவமதித்துவிட்டனர். அப்போது துரியோதனன் கர்ணனுக்கு அங்கதேசம் என்ற நாட்டைக் கொடுத்து, அவனை அங்கதேசத்தின் அரசனாக முடிசூட்டினான். இதனால் துரியோதனன் மீது கர்ணன் மிகுந்த நட்பு கொண்டு இருந்தான். துரியோதனனும் கர்ணன் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு இருந்தான்.

சகுனி, கர்ணன் முதலியவர்களும் பாண்டவர்கள் மீது பொறாமை கொண்டு இருந்தனர். துரியோதனன் ஒரு சூதாட்டத்தின் மூலமாக பாண்டவர்களின் நாட்டை பறித்துக் கொண்டான். ஆகவே பாண்டவர்கள் 13 வருடம் காட்டுக்குச் சென்று விட வேண்டும் என்றும், பதிமூன்று வருடம் கழித்து மீண்டும் நாட்டை பாண்டவர்களுக்கு திருப்பி கொடுத்து விடுவேன் என்றும் துரியோதனன் கூறினான். பிறகு பாண்டவர்கள் 13 வருடம் காட்டில் வசித்தனர். 13 வருடம் கழித்து பாண்டவர்கள் மீண்டும் தங்கள் நாட்டைக் கேட்டனர். ஆனால் துரியோதனன் பாண்டவர்களின் நாட்டை திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டான்.

இதனால் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் பெரும் பகை ஏற்பட்டது. கௌரவர்கள் மீது போர் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

5. கிருஷ்ணன் தூது

பாண்டவர்களின் நாட்டை துரியோதனன் கொடுக்க மறுத்துவிட்டதால், பாண்டவர் சார்பில் கிருஷ்ணர் தூதுவனாகச் சென்றார். பாண்டவர்களின் நாட்டைத் திருப்பிக் கொடுத்து விடும்படி கேட்டார். அப்போது துரியோதனன் கிருஷ்ணரை எதிர்த்து பேசினான். பாண்டவர்களுக்கு ஊசிமுனை இடம் கூட கொடுக்க முடியாது என்று துரியோதனன் கோபமாக பேசினான். துரியோதனனின் தந்தையாகிய திருதராஷ்டிரன்

அமைதியாக இருந்தார். அதைக்கண்ட பீஷ்மர் திருதராஷ்டிரனை பார்த்து பேசினார், "அரசனே நீங்கள் கிருஷ்ணரின் பேச்சைக் கேட்காவிட்டால் உனது நூறு பிள்ளைகளையும் போரில் இழக்க வேண்டியிருக்கும்" என்று கூறினார். அப்போது துரியோதனன் பீஷ்மரைப் பார்த்து "தாத்தா அவர்களே நான் போரைப் பற்றி கவலைப்பட வில்லை போரில் நான் இறந்தாலும் பரவாயில்லை" என்று கூறினான்.

இதைக் கண்ட விதுரன் துரியோதனனை கடுமையாகத் திட்டினான், "துரியோதனா, பெரியவர்களை மதிக்கக் கற்றுக்கொள். பாண்டவர்களின் நாட்டை கொடுத்துவிடு. உன்னுடைய சுயநலத்திற்காக அஸ்தினாபுரத்தை அழிக்க நினைக்கிறாய், பலரின் உயிரோடு நீ விளையாடுகிறாய், உன்னுடைய மூடத்தனத்தால் உன்னுடைய கௌரவ குலம் அழியப்போகிறது. உன்னை நம்பி வரும் பல அரசர்களும் அழியப் போகிறார்கள். ஆகவே உன்னுடைய பேராசையை விட்டுவிட்டு பாண்டவர்களின் நாட்டை அவர்களுக்கு திருப்பிக் கொடுத்துவிடு" என்றார்.

அதைக் கேட்ட துரியோதனன் விதுரனை பார்த்து பேசினான். "விதுரரே, நீ எம்முடைய குலத்தில் பிறந்து இருந்தால் உனக்கு வீரம் இருக்கும். நீ ஒரு பணிப்பெண்ணுக்கு தவறான முறையில் பிறந்து வந்தாய் ஆகவே நீ கோழைத்தனமாக பேசுகிறாய்" என்று கூறினான்.

இதனால் கடும் கோபம் கொண்ட விதுரர், "அடே துரியோதனா, நீ பேராசையினால் மதியிழந்து பேசுகிறாய். இதோ என்னுடைய வில்லை பார் மூன்று உலகத்தையும் வெல்லக்கூடிய இந்த வில் உமக்கு பயன்படாமல்

போகட்டும்." இவ்வாறு கூறிய விதுரன் போரில் கலந்து கொள்ளவில்லை. அதைக் கண்ட கிருஷ்ணர் சிரித்தபடி பேசினார் "பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் நடந்தால் அப்போது இந்த விதுரன் பாண்டவர்களை எளிதாக தோற்கடித்து இருப்பார். அவர் தனது வில்லை உடைத்துவிட்டதால் பாண்டவர்களுக்கு பெரும் ஆபத்து நீங்கிவிட்டது" என்றார். அதன் பிறகு கிருஷ்ணர் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

6. போருக்கு வேண்டிய ஏற்பாடுகள்

துரியோதனன், கிருஷ்ணருக்கும் கூட தகுந்த பதில் சொல்லவில்லை ஆகவே கௌரவர்கள் மீது போர் தொடுக்க பாண்டவர்கள் முடிவு செய்தனர். பாண்டவர்களுக்கு முன்பே துரியோதனன் போருக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொண்டு இருந்தான். ஆகவே இருவரும் போர் செய்வதற்காக நாள் குறிக்கப்பட்டிருந்தது. துரியோதனன் பல அரசர்களை சென்று பார்த்தான். பீஷ்மர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமா போன்றவர்களை எல்லாம் துரியோதனன் சந்தித்தான். பீஷ்மர் அஸ்தினாபுரத்து அரண்மனைக்கு கட்டுப்பட்டவர். ஆகவே பீஷ்மருக்கு பாண்டவர்களின் மீது பாசம் இருந்தாலும் அவர் கௌரவர் பக்கம் சேர்ந்து கொண்டார். துரோணர் கிருபர், அஸ்வத்தாமா போன்றவர்களுக்கும் பாண்டவர் மீது பாசம் இருந்தது. ஆனால் அவர்கள் எல்லாம் அஸ்தினாபுரத்து அரண்மனையில் வாழ்ந்து வந்ததால் கௌரவர்கள் பக்கம்

சேர்ந்துவிட்டனர். பாண்டவர்களின் மாமாவாகிய சல்லியன் வாய் தவறி ஒரு வாக்கு துரியோதனனிடம் சொல்லிவிட்டான். ஆகவே சல்லியனும் கௌரவர் பக்கம் சேர்ந்துவிட்டான். துருபதன், விராடன், சிகண்டி, திருஷ்டத்யூமன், சாத்யகி போன்ற வீரர்கள் பாண்டவர்களின் பக்கம் இருந்தனர்.

துரியோதனனும், அர்ஜுனனும் ஒரே நேரத்தில் கிருஷ்ணரை சந்தித்தனர். அப்போது கிருஷ்ணர் கூறினார். “ஆயுதங்களுடன் கூடிய என்னுடைய நாராயண படைகள் வேண்டுமா அல்லது எந்த ஆயுதமும் இல்லாமல் நான் வேண்டுமா” என்றார். அப்போது அர்ஜுனன் கூறினான் “பகவானே, எந்த ஆயுதமும் இல்லாமல் எனக்கு நீங்கள் தேர் ஓட்டினால் போதும்” என்றான். அப்போது கெட்ட எண்ணத்துடன் இருந்த துரியோதனன் கிருஷ்ணரைப் பார்த்து “கிருஷ்ணா என்னுடைய தம்பி உங்களை விரும்பிக் கேட்டதால் நீங்கள் அவன் பக்கம் சென்றுவிடுங்கள். நான் உங்களின் படைகளை அழைத்துக் கொள்கிறேன்” என்றான். கிருஷ்ணர் எந்த ஆயுதமும் இல்லாமல் வரப்போகிறான். கிருஷ்ணர் அப்படி வருவதால் நமக்கு எந்த பயனும் ஏற்படாது என்று துரியோதனன் நினைத்தான். ஆனால் அர்ஜுனன் கிருஷ்ணன் மீது பக்தி கொண்டு ஆயுதம் இல்லாவிட்டாலும் கிருஷ்ணர் நமது பக்கம் இருந்தால் போதும் என்று நினைத்தான். கிருஷ்ணர் துரியோதனனின் குணத்தைப் புரிந்துகொண்டுதான் அவனிடம் அப்படிப் பேசினார். கிருஷ்ணர் அர்ஜுனனின் தேரோட்டியாக இருந்த அவனுக்கு பல அறிவுரைகளைக் கூறினார்.

சல்லியன்

பாண்டவர்களின் தாய்மாமன் சல்லியன். இவர் பாண்டவர்களின் பக்கம் சேர்ந்து துரியோதனனை தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்தார். ஆகவே சல்லியன் தனது நாட்டில் இருந்து பல ஆயிரக் கணக்கான படை வீரர்களுடன் வந்து கொண்டு இருந்தார்.

அதை அறிந்த துரியோதனன் சல்லியனுக்கும் அவனது படை வீரர்களுக்கும் தனது ஆட்கள் மூலம் உணவளித்து உபசரித்தான்.

அந்த உபசரிப்புகள் எல்லாம் பாண்டவர்களின் ஏற்பாடு என்று சல்லியன் நினைத்தான். ஆகவே அந்த உபசரிப்புக்கு காரணமாக உள்ளவர்களை நான் பார்க்க வேண்டும் என்று கூறினான். பிறகு அங்கு துரியோதனன் வந்து சல்லியனை வணங்கி நின்றான்.

சல்லியன் சொன்னான் “துரியோதனா, நீ அளித்த உணவை உண்டு நானும் எமது வீரர்களும் மகிழ்ச்சி அடைந்தோம் ஆகவே உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறு” என்றான். துரியோதனன் சொன்னான் “மாமா அவர்களே நீங்களும் உங்கள் படையும் எங்களுக்காக போரில் கலந்து கொள்ள வேண்டும்” என்றான். சல்லியன் தான் கொடுத்துவிட்ட வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக துரியோதனனிடம் சேர்ந்து விட்டான்.

7. மகாபாரத போர்க்களம்

கெளரவர் பக்கம் 11 அக்ஷௌஷிணி படைகளும், பாண்டவர்களின் பக்கம் 7 அக்ஷௌகிணி படைகளும் போரில் கலந்து கொண்டன. ஒரு க்ஷௌகிணி என்றால் 21,870 தேர், 21,870 யானைகள் 1,09,350 காலாட்படைகள் 65,670 குதிரைகள் ஆகும். பாண்டவர்களும் அவர்களின் படைகளும் ஒரு பக்கத்தில் போருக்குத் தயாராக நின்றனர். அவர்களுக்கு நேர் எதிர்புறம் கௌரவர்களும், அவர்களின் படைகளும் போருக்குத் தயாராக இருந்தனர்.

மாவீரன் அர்ஜுனன் தனது வில் ஆகிய காண்டீபத்தை கையில் ஏந்தியபடி ஒரு தேரில் நின்று கொண்டு இருந்தான். அந்த தேரை ஓட்டுவதற்கு கிருஷ்ணனும் தேரில் அமர்ந்து இருந்தான். அப்போது அர்ஜுனன் கிருஷ்ணரை பார்த்து கூறினான். "பகவானே நான் நமது எதிரி படையாகிய கௌரவர் படைகளை பார்க்க வேண்டும், ஆகவே அதற்கு வசதியாக நமது தேரை நிறுத்துவாயாக" என்று அர்ஜுனன் கூறினான். பிறகு கிருஷ்ணன் தேரை நகர்த்தி அர்ஜுனன் கௌரவர் படையை பார்க்கும்படி நிறுத்தினான்.

8. அர்ஜுனனின் துயரம்

தேரில் நின்றபடி அர்ஜுனன் கௌரவர் படைகளை கூர்ந்து கவனித்து பார்த்தான். அங்கே அர்ஜுனன் மீது பாசம் கொண்ட தாத்தா பீஷ்மரை பார்த்தான். தங்களின்

ஆசிரியர் ஆகிய துரோணாச் சாரியாரையும் பார்த்தான். பாசமுள்ள மாமாவாகிய சல்லியனையும் அர்ஜுனன் பார்த்தான். மேலும் தனது தந்தையைப் போன்ற பூரிசிரவஸையும் பார்த்தான். மேலும் கௌரவ படையில் உள்ள பல உறவினர்களையும் நண்பர்களையும் அர்ஜுனன் பார்த்தான். பிறகு தன்னுடைய படைகளையும் அர்ஜுனன் பார்த்தான். இரண்டு படைகளிலும் நிற்கின்ற நண்பர்கள் சகோதரர்கள், பெரியப்பா, சிற்றப்பா, பாட்டன், முப்பாட்டன் குருநாதர்கள், பேரன்கள், மாமன், மைத்துனர் முதலியவர்களையெல்லாம் அர்ஜுனன் பார்வையிட்டான். அவர்களையெல்லாம் கண்ட அர்ஜுனனின் மனம் மிகவும் துயர் அடைந்தது.

பிறகு அர்ஜுனன் கிருஷ்ணரை பார்த்து பேசுகின்றான், "பகவானே என் மீது பாசம் கொண்டுள்ள இவ்வளவு உறவினர், நண்பர்கள் குருநாதர்கள் எல்லோரும் இந்த போரில் மரணம் அடைந்த பிறகு எனக்கு எப்படி மகிழ்ச்சி இருக்கும். இவர்கள் எல்லாம் ரத்த வெள்ளத்தில் இறந்த பிறகு கிடைக்கக்கூடிய இந்த நாடு எனக்கு வேண்டாம்."

"கிருஷ்ணா, எனது பகவானே இந்த போர்க்களத்தில் கூடியிருக்கும் உறவினர்களின் கூட்டத்தைப் பார்த்து எனது உடல் சோர்வடைகின்றன. எனது வாயும் உலர்கிறது. மயிர்சிலிர்ப்பு ஏற்படுகின்றது. எனது உடலில் நடுக்கம் ஏற்படுகின்றது. நான் போர் செய்ய விரும்பவில்லை எனக்கு மயக்கம் வருகிறது. என் வில்லாகிய காண்டீபமும் எனது கையில் இருந்து நழுவுகின்றது."

"கௌரவர் படைகள் என்னை கொன்றாலும்

பரவாயில்லை. நான் போர் செய்ய விரும்பவில்லை." இவ்வாறு கூறிய அர்ஜுனன் தனது வில்லையும், அம்புகளையும் கீழே எறிந்துவிட்டு தேர்தட்டில் அமர்ந்து விட்டான்.

௯. கிருஷ்ணரின் தூண்டுதல்

அர்ஜுனனின் இந்த செயலைக் கண்ட கிருஷ்ணர் அர்ஜுனனை பார்த்து பேச ஆரம்பித்தார்.

"அர்ஜுனா உனது இந்த செயல் உனக்கு இழிவைத்தான் உண்டாக்கும். இது போன்ற சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய். போர்க்களத்துக்கு வந்த ஒரு வீரனுக்கு போர் செய்வது தான் தர்மம். இப்போது போர் புரிவதுதான் உனது கடமை. நீ உனது மன தளர்ச்சியை நீக்கிவிட்டு எழுந்து நில்." இவ்வாறு தொடர்ந்து பல அறிவுரைகளை கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு கூறுகிறார். அப்போது அர்ஜுனன் கிருஷ்ணரிடம் பலவித கேள்விகளையும், சந்தேகங்களையும் கேட்கிறான். அப்போது கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு பதில் சொல்வது போல் இந்த உலக மக்களுக்கு பல அறிவுரைகளையும் தத்துவங்களையும் கூறுகின்றார்.

10. திருதராஷ்டிரனும், சஞ்சயனும்

ஒரு முறை வியாச முனிவர் அஸ்தினாபுரத்து அரண்மனைக்கு வந்தார். அப்போது கௌரவர்களின் தந்தையாகிய திருதராஷ்டிரன் வியாசரை வணங்கி வரவேற்றான். அப்போது அவன் வியாசரிடம் நான்

போர்க்கள நிகழ்ச்சிகளை காண விரும்புகிறேன் என்றான். அப்போது வியாசர் திருதராஷ்டிரனுக்கு ஞானக்கண் கொடுப்பதாகக் கூறுகிறார். அதற்கு திருதராஷ்டிரன் நான் எனது கண்ணால் அந்த போர்க்களத்தை பார்க்க விரும்பவில்லை. ஆகவே எனது மந்திரி ஆகிய சஞ்சயனுக்கு நீங்கள் ஞானக்கண் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறான். பிறகு வியாசர் சஞ்சயனுக்கு ஞானக்கண் கொடுக்கிறான்.

பிறகு சஞ்சயன் அஸ்தினாபுரத்து அரண்மனையில் அமர்ந்து கொண்டே தனது ஞானக் கண்ணால் போர்க்களத்தைப் பார்க்கிறான். சஞ்சயன் திருதராஷ்டிரனின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு போர்க்கள நிகழ்ச்சிகளை அவ்வப்போது திருதராஷ்டிரனுக்கு கூறுகிறான். அர்ஜுனன் தனது வில் அம்புகளை போட்டு விட்டு தேரில் அமர்ந்து விட்டதும், அவனுக்கு கிருஷ்ணர் அறிவுரைகளை கூறுவதையும், திருதராஷ்டிரனுக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டு போர்க்கள நிகழ்ச்சிகளை அவ்வப்போது சஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு கூறுகிறான். இப்படி போர்க்களத்தின் பல நிகழ்ச்சிகளை சஞ்சயன் மூலமாக திருதராஷ்டிரன் தெரிந்து கொள்கிறான்.

போர்க்களத்தில் அர்ஜுனனும் கிருஷ்ணரும் பேசிக் கொள்ளும் நிகழ்ச்சிகள் சஞ்சயன் மூலமாகவே திருதராஷ்டிரன் தெரிந்து கொள்கிறான். அதுவே பகவத்கீதை என்னும் புனித நூல் ஆகும்.

11. பகவத்கீதை தொடர்ச்சி

அடுத்தபடியாக இந்த புத்தகத்தில் அர்ஜுனனின்

கேள்வியும், அதற்கு கிருஷ்ணர் கூறும் விளக்கமும், அடுத்து நமது விளக்கமும் தொடர்ந்து படிப்போம். இனி வருவது எல்லாம் பகவத் கீதையின் பகுதிகள் ஆகும்.

போர் செய்ய மாட்டேன் என்று கூறிய அர்ஜுனனிடம் கிருஷ்ணர் பல அறிவுரைகளை கூறுகிறார். அர்ஜுனனை போர் செய்யும்படி தொடர்ந்து தூண்டிக் கொண்டே இருக்கிறார். அப்போது அர்ஜுனன் கிருஷ்ணரிடம் பலவித கேள்விகளை கேட்டுக் கொண்டு இருக்கிறார். அப்போது கிருஷ்ணர் உலக நியதிகளையும் பல தத்துவங்களையும் எடுத்துக்கூறி, அர்ஜுனனை போர் செய்யும்படி வற்புறுத்துகிறார்.

அர்ஜுனனின் கேள்வி : "கிருஷ்ணா திருதராஷ்டிரனின் மகன்களான கௌரவர்களையும், அவர்களின் கூட்டாளிகளையும் கொல்வதால் எனக்கு எந்த பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவே எப்படிப் பார்த்தாலும் நான் அவர்களை கொல்ல விரும்பவில்லை."

கிருஷ்ணனின் பதில் : "அர்ஜுனா, துரியோதனனும் அவனின் கூட்டத்தினரும் உங்கள் நாட்டை நயவஞ்சகமாக பிடித்துக் கொண்டு உங்களை காட்டுக்கு அனுப்பினார்கள். உங்களின் மனைவியாகிய திரௌபதியின் சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்தனர். மேலும் உங்களுக்கு அவர்கள் பலவித தீங்குகளை செய்து வந்தனர். இப்போது அவர்கள் உங்களை கொல்லவும் தயாராக வந்து இருக்கின்றனர். ஆகவே தனக்கு கெடுதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வரும் ஆததாயிகளை உடனே கொன்றுவிட வேண்டும். அப்படி அவர்களை கொல்வதால் கொல்பவனுக்கு எந்த பாவமும் ஏற்படாது."

12. ஆததாயிகள்

நமது விளக்கம்: 1. தீ வைப்பவன், 2. விஷம் கொடுப்பவன், 3. ஆயுதம் எடுத்துக் கொண்டு கொல்ல வருபவன். 4. பிறர் செல்வத்தை பறித்துக் கொள்பவன், 5. நிலத்தை பறித்துக் கொள்பவன், 6. பிறர் மனைவியை பறிப்பவன். இந்த ஆறுபேரும் ஆததாயி எனப்படுவர். துரியோதனன் அவனது தம்பிகள் மற்றும் அவனின் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள், அவர்களையெல்லாம் கிருஷ்ணர், 'ஆததாயிகள்' என்று கூறுகிறார்.

ஆகவே இது போன்ற ஆததாயிகளுக்கு நாம் கெடுதல் செய்தால் நமக்கு எந்த பாவமும் ஏற்படாது. எப்போதும் பாவம் செய்து கொண்டு இருப்பவர்களின் மீது நாம் எந்த வித கருணையும் காட்ட வேண்டியதில்லை. ஆததாயிகளுக்கு நாம் உதவி செய்வதால் அவர்கள் செய்யும் பாவங்கள் நம்மையும் வந்து அடையும்.

1. பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இருக்கும் போது அவர்களை கொல்வதற்காக துரியோதனன் அரக்கு மாளிகைக்கு தீ வைத்தான். அதை பாண்டவர்கள் முதலிலேயே அறிந்து இருந்ததால் பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இருந்து உயிர் பிழைத்துவிட்டனர்.

2. பாண்டுவின் மகன் பீமன் மிகப்பெரிய பலசாலியாக இருந்தான். ஆகவே அவன் மீது பொறாமை கொண்ட துரியோதனன் பீமனை எப்படியாவது கொன்று விட வேண்டும் என்று நினைத்தான். ஆகவே பீமன்

சாப்பிடுவதற்காக வைத்து இருந்த உணவில் துரியோதன கூட்டத்தினர் விஷத்தை கலந்துவிட்டனர். கடவுளின் செயலால் பீமன் உயிர் பிழைத்துக் கொண்டான்.

3. அமைதியாக வாழ்ந்து கொண்டு இருந்த பாண்டவர்களை துரியோதனன் சூதாட்டத்திற்கு அழைத்தான். கௌரவர்களுடன் விரோதம் வேண்டாம் என்று நினைத்த யுதிஷ்டிரன் துரியோதனனுடன் சூதாடினார். அப்போது நயவஞ்சகனான சகுனி துரியோதனனுக்காக பகடை காய்களை உருட்டினான். சூதாட்டத்தில் பாண்டவர்கள் தோற்றுவிட்டனர். ஆகவே பாண்டவர்கள் தங்கள் நாட்டை இழந்து 13 வருடம் காட்டிற்குச் சென்றனர். இவ்வாறு துரியோதனன் பாண்டவர்களின் நாட்டை பறித்துக் கொண்டான்.

5. துரியோதனனின் தம்பியாகிய துட்சாதனன், பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதியின் சேலையைப் பிடித்து இழுத்து அவமானப்படுத்தினான். அப்போது கிருஷ்ணரின் அருளால் திரௌபதியின் மானம் காப்பாற்றப்பட்டது. மேலும் ஒரு முறை துரியோதனனின் கூட்டாளியான ஜெயரத்தன் திரௌபதியை கடத்திச் செல்ல முயன்றான்.

6. இவ்வளவு குற்றங்களை புரிந்து துரியோதனனும் அவனது கூட்டத்தினரும் இப்போது ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பாண்டவர்களை கொல்ல தயாராக வந்து இருக்கின்றனர்.

ஆகவே இது போன்ற கொடிய குற்றம் புரிந்து வரும் துரியோதனனின் கூட்டத்தை கிருஷ்ணர் ஆததாயிகள் என்று குறிப்பிடுகிறார்.

13. போரும் குலநாசமும்

அர்ஜுனன்: "கிருஷ்ணா எங்களின் தந்தையாகிய பாண்டுவும், கௌரவர்களின் தந்தை ஆகிய திருதராஷ்டிரனும் உடன் பிறந்த சகோதரர்கள். ஆகவே பாண்டவர்களாகிய நாங்களும், கௌரவர்களாகிய துரியோதன கூட்டமும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். நான் போர் புரிவதால் எங்கள் குலம் அழிந்து போகும். எவன் தன் குலத்தை அழிக்கிறானோ அவன் கொடிய பாவி. ஆகவே நான் அவர்களை கொல்ல விரும்பவில்லை. குடும்பத்தினரை கொல்வதால் எனக்கு இந்த உலகத்திலோ அல்லது மேல் லோகத்திலோ எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. மேலும் எனது பாசத்திற்குரிய தாத்தாவாகிய பீஷ்மரும், மாமா சல்லியனும், மதிப்புக்குரிய ஆசிரியர் துரோணரும், கிருபரும், அங்கே இருக்கின்றனர். ஆகவே நான் போர் புரிய விரும்பவில்லை."

கிருஷ்ணர் : "அர்ஜுனா, குலம் நாசம் என்பது உங்கள் இருவருக்கும் பொதுவானது. இந்தக் குல நாசத்தைப் பற்றி துரியோதனன் மற்றும் கௌரவர்கள் யாரும் கவலைப்படவில்லை. மேலும் கௌரவர் படையில் இருக்கும், பீஷ்மர் துரோணர், கிருபர், சல்லியன் முதலியவர்களும் போருக்கு தயாராகவே இருக்கிறார்கள், அப்படி இருக்கும் போது நீ மட்டும் ஏன் குலநாசத்தைப் பற்றி கவலைப்படுகிறாய்."

14. பேராசையின் விளைவுகள்

அர்ஜுனன் : "பீஷ்மர், துரோணர், கிருபர் முதலியவர்கள் அஸ்தினாபுரத்து அரண்மனையில் வசித்து வருபவர்கள். அவர்கள் அனைவரும் அஸ்தினாபுரத்து அரண்மனைக்கு கட்டுப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் கௌரவ படையில் சேர்ந்து உள்ளனர். எங்கள் மாமாவாகிய சல்லியன் வாய் தவறி துரியோதனனுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டார். ஆகவே அவரும் கௌரவ படையில் சேர்ந்துவிட்டார். இவர்கள் எல்லாம் தர்மம் தெரிந்தவர்கள். காலத்தின் கட்டாயத்தால் கௌரவர்களின் கூட்டத்தில் சிக்கிக் கொண்டு உள்ளனர்.

ஆனால் பேராசையினால் அறிவை இழந்த கௌரவர்கள், குல நாசத்தினால் ஏற்படும் குற்றத்தைப் பற்றியோ, நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஏற்படப்போகும் அழிவைப் பற்றியும் கவலைப்படவில்லை. பேராசை பிடித்தவர்களுக்கு மனதில் உள்ள நீதியும் தர்மமும் அழிந்துவிடும். இவர்கள் போரினால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றி கவலைப்படவும் மாட்டார்கள்."

"இருபடைகளிலும் ஒன்று கூடியிருக்கும் உறவினர்கள், நண்பர்கள் எல்லாம் ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டி ஒருவரை ஒருவர் வெட்டிக் கொல்வது எவ்வளவு பயங்கரமான பாவம். பேராசை பிடித்தவர்கள் இதையெல்லாம் சிந்திக்க மாட்டார்கள்."

"ஆனால் கிருஷ்ணா நாம் பேராசையினால் அறிவை இழக்கவில்லையே, குல நாசத்தினால் ஏற்படும் பாவம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. அப்படி தெரிந்தும் கூட நாம் பாவச்செயலில் ஏன் ஈடுபட வேண்டும்? இதை நினைத்து நாம் போரில் இருந்து விலகி விடுவதுதான் நல்லது என்பது என் கருத்து."

"பல காலமாக பல தலைமுறைகளாக இருந்து வரும் குல கட்டுப்பாடுகள் அழிந்துவிடும். அப்படி கட்டுப்பாடுகள் அழிந்துவிட்டால் நமது குலத்தில் தர்மங்கள் அழிந்து அதர்மங்கள் தலை தூக்கிவிடும். அப்போது சிறுவர்களும், பெரியவர்களும் ஒருவருக்கொருவர் பாசம் இல்லாமல் இருப்பார்கள். கணவன் மனைவியை மதிக்க மாட்டான். மனைவி கணவனை மதிக்க மாட்டாள். ஆண் பெண் உறவில் கட்டுப்பாடுகள் இல்லாமல் போகும்."

"குலநாசம் அடைந்தால் அந்த குலத்தில் பிறந்தவர்கள் எல்லாம் பலவித பாவச் செயல்களில் ஈடுபடுவார்கள். பிறகு பயங்கர நரகங்களில் வீழ்ந்து எமனுடைய தண்டனைகளை அனுபவிப்பார்கள். ஆகவே பெரும் அழிவை உண்டாக்கக் கூடிய இந்த போரை நான் விரும்பவில்லை" இவ்வாறு அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினான்.

நமது விளக்கம்

பேராசை : ஒரு மனிதனின் மனதில் பேராசை குடிபுகுந்துவிட்டால் அவன் எப்படிப்பட்ட பாவங்களையும் செய்வதற்கு துணிந்துவிடுவான். அப்படி பேராசை உள்ளவனின் மனதில் கொடிய எண்ணங்கள் இருக்கும், மேலும் அவன் உற்றார், உறவினர், நண்பர்களைப் பற்றி

சிறிதும் கவலைப்பட மாட்டான். தனது தேவைக்காக பல கொடிய பாவங்களை சிறிதும் வெட்கம் இல்லாமல் செய்வான்.

குலநாசம் : ஒருவனின் குடும்ப உறுப்பினர்களுக்கும் அவனது உறவினர்களுக்கும் அழிவு ஏற்பட்டால் அது குலநாசம் என்று பெயர். பெற்றோர் இல்லாத பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பெரியோர்களை இழந்த குடும்பம் இது போன்ற நிலைகள் ஏற்படுவது குலநாசம் ஆகும்.

இப்படி குலநாசம் ஏற்படுவதால் அந்தக் குடும்பத்தில் கட்டுப்பாடுகள் இல்லாமல் அவரவர் இஷ்டத்திற்கு பாவ செயல்களில் ஈடுபடுவார்கள். அப்போது பாவங்கள் சூழ்ந்து கொண்டு அந்த குலம் சிதறி உருத்தெரியாமல் போய்விடும். ஆகவே இது போன்ற குல நாசத்திற்கு காரணமாக இருப்பவர்கள் பெரும் பாவி என்று கருதப்படுவார்கள்.

15. நீ கடமையைச் செய்

கிருஷ்ணர்: "அர்ஜுனா; இப்போது நாம் இருப்பது போர்க்களம். போர்க்களத்திற்கு வந்துவிட்ட பிறகு போர் புரிவதுதான் உன்னை போன்ற ஷத்திரிய வீரனின் கடமை. இப்போது உனக்கு ஏற்பட்டு இருக்கும் இந்த மனப்பாங்கை சான்றோர்கள் ஏற்க மாட்டார்கள். புத்திசாலியான நீ இந்த நேரத்தில் கோழைத்தனத்தை எப்படி அடைந்தாய்? நீ இப்போது போர் செய்யாமல் இருந்தால் அது உன் புகழை கெடுக்கும். உனக்கு சொர்க்கமும் கிடைக்காது."

"நீ எதிரிகளுக்கு பயத்தை உண்டாக்குபவன். சக்தி வாய்ந்த பல அரசர்களை நீ எளிதாக தோற்கடித்தவன். நீ போருக்கு அஞ்சும் கோழைகளைப் போல பேசாதே. இது போன்ற பேச்சும், கோழைத்தனமும் உன்னைப் போன்ற மாவீரனுக்கு ஏற்றதல்ல. ஆகவே உடனே எழுந்து போருக்காக நிமிர்ந்து நில்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா நானோ போரினால் உண்டாகப் போகும் குலநாசத்தைப் பற்றி கவலைப் படுகிறேன். நீங்களோ போர்புரிவது தான் எனது கடமை என்று கூறுகிறீர்கள். அப்படி நான் எனது கடமையை செய்வதால் அதன் பலன் தீமையாக அல்லவா முடியும்."

கிருஷ்ணன் : "அர்ஜுனா ஒருவன் தனது கடமையை செய்யும் போது அதனால் உண்டாகும் நன்மை தீமைகளைப் பற்றி கவலைப்படக்கூடாது. நீ உனது கடமையை செய்வதற்கு மட்டும்தான் உரிமை இருக்கிறது. நீ உன் கடமையைச் செய்வதால் உண்டாகும் நன்மை தீமைகளில் உனக்கு எந்த உரிமையும் இல்லை. ஆகவே நீ உன் கடமையை செய் பலனை எதிர்பார்க்காதே."

விளக்கம் : ஒருவன் தனது கடமையை செய்யும் போது அதன் பலனை எதிர்பார்த்து கொண்டு இருக்கக்கூடாது. கடமையை செய்வது மட்டும்தான் நமது வேலை. அதற்கு உண்டான பலனை கொடுப்பது இறைவன் செயல். யார் யாருக்கு எப்போது எதை கொடுக்க வேண்டும் என்று இறைவனுக்கு தெரியும். அந்த இறைவனின் செயலை யாராலும் தடுக்கமுடியாது. ஆகவே கடமையை மட்டும் ஒழுங்காக செய்து முடிக்க வேண்டும். நாம் நமது கடமையை ஒழுங்காக செய்யும்போது அதனால் உண்டாகும் நன்மை

தீமைகளைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது. சிறு முயற்சிகள் கூட பெரிய ஆபத்தில் இருந்து நம்மை காப்பாற்றிவிடும்.

அர்ஜுனன் : "கிருஷ்ணா, துரியோதனனின் படையில் துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் போன்ற குருமார்களும், பீஷ்மர், பூரிசிரவஸ், சல்லியன் போன்ற மதிப்பு மிக்க பெரியவர்களும் இந்த போரில் தங்கள் உயிரை விடுவதற்காக வந்து இருக்கிறார்களே, இந்த மதிப்பு மிக்க பெரியவர்களும், உறவினர்களும் இல்லாமல் நான் இந்த நாட்டைப் பிடித்தால் எனக்கு எந்த நன்மையும் உண்டாகாது. நான் இங்கு எனக்காக நாட்டையும் சுகபோகங்களையும் விரும்பவில்லை."

"கிருஷ்ணா நான் எனது கோழைத்தனத்தால் மிகவும் குழப்பமாக இருக்கிறேன். எது நல்லது எது கெட்டது என்று எனக்கு புரியவில்லை ஒரே குழப்பமாக உள்ளது. நான் உங்களுடைய சீடன். நான் உங்களை சரணடைகிறேன். எனக்கு தகுந்த அறிவுரைகளை நீங்கள் தான் கூற வேண்டும்."

16. பிறப்பும் இறப்பும்

கிருஷ்ணர் : "அர்ஜுனா, ஒரு மனிதன் பிறக்கும் போதே அவனின் மரணத்திற்கு உண்டான நாளும் முடிவு செய்யப்படுகிறது. சிலர் குழந்தைப் பருவத்தில் மரணம் அடைகின்றனர். சிலர் வாலிபப் பருவத்தில் மரணம் அடைகின்றனர். சிலர் திருமணம் முடிந்தவுடன் மரணம்

அடைகின்றனர். சிலர் வயதான பிறகு மரணம் அடைகின்றனர்."

"எல்லோரும் ஒரே மாதிரி மரணம் அடைவதில்லை. மனிதனும் மற்ற உயிரினங்களும் பலவிதமான முறையில் மரணம் அடைகின்றனர். நோயினாலும், நீரினாலும், நெருப்பினாலும், பட்டினியினாலும், கொலை மற்றும் தற்கொலைகளாலும், மிருகங்களால் தாக்கப்பட்டும் மரணம் ஏற்படுகிறது."

"யார் யாருக்கு எப்போது எப்படி மரணம் ஏற்படும் என்பது பிறக்கும் போதே முடிவு செய்யப்படுகிறது. ஆகவே போர் வீரர்கள் போரில் மரணம் அடைவது என்பது ஒரு வியப்பான விஷயம் இல்லை."

அர்ஜுனன் : "கிருஷ்ணா, எல்லோர் மரணமும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது என்றால் நான் ஏன் போரில் ஈடுபட வேண்டும்? எனது உறவினர்களின் மீது நான் அம்புகளை ஏவி விட வேண்டும்?"

கிருஷ்ணர் : "அர்ஜுனா, நான், எனது என்ற அகந்தையை ஒழித்துவிடு. நீ போர் புரிவதால் நீ யாரையும் கொல்லப்போவது இல்லை. நீ வெறும் கருவிதான். உன்னை இயக்குபவன் நான். அம்புகளை விடுவது மட்டும்தான் உனது வேலை. அப்போது யார் மரணம் அடைவார்கள், யார் பிழைப்பார்கள் போன்ற செயல்கள் எல்லாம் அவரவர் விதியின் படிதான் நடக்கும்."

"இப்போது இந்த போரில் கொல்லப்பட போகிறவர்கள் எல்லோரும் ஏற்கனவே என்னால் கொல்லப்பட்டவர்கள். நீ காணும் காட்சிகள் எல்லாம் வெறும் மாயை உருவங்கள்.

எல்லோரும் பலமுறை அழிந்து பலமுறை தோன்றியவர்கள். அர்ஜுனா, நீயோ உனது பாண்டவர் படைகளோ அல்லது கௌரவர் படைகளோ யாரும் யாரையும் கொல்லப் போவது இல்லை. உடல் அழியக்கூடியது. ஆனால் ஆன்மாவை யாராலும் அழிக்க முடியாது."

17. ஆன்மா என்றால் என்ன?

அர்ஜுனன் : "உடல் என்றால் என்ன? ஆன்மா என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "நமது உடலை மறைப்பதற்கு பல வித ஆடைகளை நாம் உடுத்துகிறோம். ஆகவே அந்த ஆடைகளுக்குள் நமது உடல் இருக்கிறது. அதே போல் நமது உடலுக்குள் ஆன்மா இருக்கிறது. நமது ஆடைகள் கிழிந்துவிடும் போது நாம் வெவ்வேறு ஆடைகளை உடுத்திக் கொள்கிறோம்."

"அதே போல உடல் அழியும் போது ஆன்மாவானது வேறு ஒரு உடலில் புகுந்து கொள்ளும். உடல் அழிந்து விடுவதால் ஆன்மா கவலைப்படுவது இல்லை. ஆன்மா புதுப்புது உடல்களில் மாறிக்கொண்டே இருக்கும்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா மனிதன் பழைய துணிகளை கழட்டி விட்டு புதிய துணிகளை உடுத்தும்போது அது அவனுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் ஆன்மா பழைய உடலை விட்டு புதிய உடலை சேரும் போது மனிதனுக்கு துன்பமாக இருக்கிறதே."

கிருஷ்ணர் : "பழைய உடலை விடுவதும் புதிய உடலை சேருவதும் சாதாரண மனிதனுக்கு துன்பமாகத்தான் இருக்கும். ஆன்மாவின் தத்துவம் புரிந்தவர்களும், ஞானிகளும் இதனால் வருத்தம் அடையமாட்டார்கள்."

"ஒரு குழந்தையின் தாய் அந்த குழந்தையின் பழைய ஆடைகளை நீக்கிவிட்டு புதிய ஆடைகளை அணிவிக்கிறார். அப்போது அந்த குழந்தை அழுவதைப் பற்றி தாய் கவலைப்படுவதில்லை. அதே போல கடவுள் நமது ஆன்மாவை புதிய உடலில் புகுத்தும் போது மனிதன் துன்பப்படுவதைப் பற்றி கடவுள் கவலைப்படுவதில்லை."

அர்ஜுனா : "இந்த ஆன்மா எல்லோருடைய உடலிலும் எப்போதும் கொல்லப்பட முடியாது. ஆகவே நீ எந்த உயிரினங்களுக்காகவும் வருந்த வேண்டியது இல்லை. எல்லா உயிரினங்களிலும் இருப்பது ஒரே ஆன்மாதான் உடல்கள் வேறுபட்டு இருப்பதால் அவை வெவ்வேறு தோற்றமாக நமக்கு தெரிகிறது. அர்ஜுனா ஒரு ஷத்திரிய வீரன் தர்மத்திற்காக போராடுவதைவிட மேன்மையான விஷயம் வேறு எதுவும் இல்லை."

அர்ஜுனன் : "இந்த போரினால் எனக்கு எப்படி மேன்மை கிடைக்கும்?"

கிருஷ்ணர் : "அர்ஜுனா நீயாகவே இந்த போரை விரும்பி தேடிப் போகவில்லை. கௌரவர்களிடம் சமாதானம் செய்து கொள்வதற்காக நீங்கள் பலமுறை முயற்சி செய்தீர்கள்."

"சூதாட்டத்தின் ஒப்பந்தப்படி நீங்கள் பதிமூன்று

வருடம் காட்டுக்கு சென்றீர்கள். அந்த பதிமூன்று வருடம் முடிந்த பிறகு துரியோதனன் உங்கள் நாட்டை திருப்பி கொடுத்திருக்க வேண்டும். ஆனால் துரியோதனன் உங்கள் நாட்டை திருப்பி கொடுக்க மறுத்துவிட்டான். உங்களுக்காக நானும் அவனிடம் தூது சென்றேன். அப்போது கூட துரியோதனன் பாண்டவர்களுக்கு ஊசிமுனை நிலம் கூட கொடுக்க முடியாது என்று கூறிவிட்டான்."

"ஆகவே வேறு வழி இல்லாமல் தானே நீங்கள் போருக்கு தயாரானீர்கள். நீங்கள் போரை விரும்பவில்லை. கௌரவர்கள் தான் போரை விரும்பினார்கள். இந்த போருக்கு முழு காரணமும் கௌரவர்கள்தான். ஆகவே நீ யுத்தம் செய்வதில் எந்த தவறும் இல்லை. உங்கள் பக்கம் நியாயமும் தர்மமும் இருக்கிறது. ஆகவே நீ யுத்தம் புரிந்து மரணம் அடைந்தாலும் நீ நேராக சொர்க்கம் சென்று விடுவாய்."

"நீ போர் செய்யாவிட்டால் உன் புகழ் அழிந்துவிடும். நீ செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறினால் உனக்கு மிகுந்த பாவம் வந்து சேரும். ஆகவே இந்த போரில் இருந்து பின் வாங்குவது முற்றிலும் தவறானது. ஆகவே நீ இரட்டை நிலைகளுக்கு ஆட்படாமல் உன் கடமையை செய்வாயாக."

18. இரட்டை நிலை

அர்ஜுனன் : "இரட்டை நிலைக்கு ஆட்படுதல் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "வெற்றி - தோல்வி, இன்பம் - துன்பம், மானம் - அவமானம், லாபம் - நஷ்டம், புகழ்ச்சி - இகழ்ச்சி

போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் இரட்டை நிலைகள் ஆகும். நமக்கு வெற்றி கிடைக்குமா, தோல்வி கிடைக்குமா, இதில் இன்பம் இருக்குமா அல்லது துன்பம் இருக்குமா, இதில் நமக்கு லாபம் கிடைக்குமா, நஷ்டம் ஏற்படுமா, இதில் நமக்கு புகழ்ச்சி இருக்குமா அல்லது இகழ்ச்சி கிடைக்குமா? இது போன்ற நிகழ்ச்சிகளை நம் மனதில் நினைத்துக் கொண்டு குழப்பம் அடைந்தால் எதையும் நாம் ஒழுங்காக செய்ய முடியாது."

"வெற்றியை நினைத்து மகிழ்ச்சி அடையக்கூடாது. தோல்வியைக் கண்டு வருத்தம் அடையவும் கூடாது. மகிழ்ச்சி, துயரம், விருப்பு, வெறுப்பு போன்றவற்றை நம் மனதில் நினைத்துக் கொண்டு இரட்டை நிலைகளுக்கு ஆளாகக்கூடாது. அர்ஜுனா இந்த மூன்று உலகங்களிலும் நான் செய்ய வேண்டிய கடமைகள் எதுவும் இல்லை. அப்படி எனக்கு கடமைகள் இல்லையென்றாலும் எனக்கென்று சில கடமைகளை ஏற்படுத்திக் கொண்டு அதை கவனத்துடன் செய்துகொண்டு வருகிறேன்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா நீங்களாகவே ஏன் கடமைகளை ஏற்படுத்திக் கொண்டு அதை செய்து வருகிறீர்கள்?"

கிருஷ்ணர் : "மனிதர்கள் எல்லாவிதங்களிலும் என்னுடைய வழியை பின்பற்றி வருகிறார்கள். ஆகவே மனிதர்களுக்கு நல்வழியை காட்டுவதற்காக நான் பல கடமைகளை செய்ய வேண்டியுள்ளது. அப்படி நான் என் கடமையை செய்யாவிட்டால் மனிதர்கள் சீர்குலைந்து போய்விடுவார்கள்."

அர்ஜூனன் : "நான் கடமைகளை செய்யாவிட்டால் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகள் எல்லாம் வீணானவை என்று நினைத்து மற்றவர்கள் என்னை பின்பற்றி அவற்றை செய்யாமல் விட்டுவிடுவார்கள். மக்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டு மனம் போனபடி கெட்ட செயல்களில் இறங்கி விடுவார்கள். ஒருவன் செய்வதை மற்றவனும் பின்பற்றுவான். பிறகு எல்லோரும் சுயநலம் உள்ளவர்களாகவும் கெட்ட நடத்தை உடையவர்களாகவும் கட்டுமீறி போய்விடுவார்கள். ஒருவன் மற்றவனுக்கு கேடு விளைவிப்பான். பிறகு மனிதர்களிடம் தர்மம் முழுவதும் அழிந்துவிடும். இதன் பயனாக மனித பிறவியே சீர்குலைந்து சிதறிப்போகும். ஆகவே நான் மக்களுக்கு வழிகாட்டவே எனது கடமைகளை செய்து வருகிறேன். ஆத்மவான்கள் தன் கடமையை சிறப்பாக செய்வார்கள்."

அர்ஜூனன் : "ஆத்மவான் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "அர்ஜூனா, எவன் தன் மனதை தன் கட்டுப்பாட்டில் வைத்து இருக்கிறானோ அவனே ஆத்மவான் ஆவான். எவனுடைய மனம் அவனின் கட்டுப்பாட்டில் இல்லையோ அது அவனின் மனம் இல்லை. மனதை தன் கட்டுப்பாட்டில் வைத்து இருப்பவன் பல சாதனைகளை புரிவான். மனதையும் ஆசைகளையும் அடக்குபவன் ஸ்திதப்ரக்ஞன் என்று அழைக்கப்படுகிறான்."

விளக்கம்

ஒரு மனிதனுக்கு மனக்கட்டுப்பாடு என்பது மிக முக்கியம். மனதை கட்டுப்படுத்தாதவன் பல துன்பங்களை அனுபவிப்பான். மனக்கட்டுப்பாடு இல்லாதவன், கோபம்,

கலகம், சோம்பல், கடமையை செய்ய மறத்தல், திருட்டு, மது அருந்துதல், புகைபிடித்தல், அளவுக்கு அதிகமாக செலவு செய்தல் போன்ற பல தீய வழிகளில் ஈடுபடுவான்.

ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் முதலில் அவன் அவனின் மனதை வெற்றிகொள்ள வேண்டும். நமது மனம் நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறு நமது மனம் கட்டுப்பாட்டில் இல்லையென்றால் நாம் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருக்கும். இதையே திருவள்ளுவர் மனத்தின்மை வினைத்தின்மை என்று கூறுகிறார். நமது மனம் உறுதியாக இருக்கும் போது நமது செயலும் உறுதியாக இருக்கும்.

19. ஸ்திதப்ரக்ஞர்கள்

அர்ஜுனன் : "கிருஷ்ணா ஸ்திதப்ரக்ஞர்களைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

கிருஷ்ணர் : "ஸ்திதப்ரக்ஞர்களின் உள்ளத்திலும், சொல்லிலும், செயலிலும் அவர்களுக்கு பற்று, பயம், கோபம், விரோதம் இருக்காது. எந்த நிலையிலும் எது நடந்தாலும் அவனுடைய உள்ளத்தில் எந்தவித பற்றும் உண்டாகாது. அவர்களின் பேச்சிலும் செயலிலும், அமைதியும், செல்வத்தை அடைந்தாலும் பெருகும் செல்வத்தை இழந்தாலும் அதனால் மகிழ்ச்சியோ துயரமோ அடைய மாட்டார்கள். ஸ்திதப்ரக்ஞர்கள் இன்பத்திலும், துன்பத்திலும், எப்போதும் அமைதியாகவே இருப்பார்கள். அவர்களுக்கு எப்போதும் கோபம் வராது."

அர்ஜுனன் : "கிருஷ்ணா எப்படிப்பட்ட மனிதர்களுக்கு கோபம் வருகிறது?"

கிருஷ்ணர் : "ஆசையினால் அறிவை இழந்தவர் களுக்குத்தான் கோபம் வரும். ஒரு மனிதனுக்கு தான் விரும்பிய பொருள், தான் ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத போதும், தான் விரும்பிய செயல்கள் நடக்காத போதும், தன்னைத்தானே உயர்வாக நினைத்துக் கொண்டு கர்வம் கொண்டு இருப்பதாலும் கோபம் வருகிறது. நாம் நினைப்பதுதான் நடக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட மனிதர்களுக்கு ஏமாற்றம் உண்டாகும் போது துயரமும் கோபமும் உண்டாகும்."

"ஒரு மனிதனுக்கு கோபம் உண்டாகும் போது அறிவின்மை ஏற்படும். அறிவின்மையால் நினைவு தடுமாற்றம் ஏற்படும். நினைவு தடுமாற்றம் ஏற்படும் போது அவனின் புத்தி கெடுகிறது. அவனின் புத்தி கெடும் போது அவன் எதையும் முன்பின் யோசிப்பதில்லை."

"கோபம் கொண்டவனுக்கு நாம் என்ன செய்கிறோம். இதன் விளைவு என்ன என்பதைப் பற்றி சிந்திப்பது இல்லை. மேலும் யாரோடு நமக்கு என்ன உறவு, நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது. இப்போது நாம் என்ன செய்துகொண்டு இருக்கிறோம் என்பதும் நினைவு இருப்பதில்லை."

"இவ்வாறு கோபத்தினால் அறிவை இழந்தவன் செய்யக்கூடாத செயலை உண்டாக்குவான், அவனிடம் கடுமை, கசப்பு, பழிவாங்கும் குணம், கோழைத்தன்மை, இயலாமை, மெத்தனம், மூடத்தனம் முதலிய குறைபாடுகள் இருக்கும்."

"இவ்வாறு அறிவின்மையால் கோபம் கொண்டவனை அவனது உறவினர்களும் நண்பர்களும் வெறுத்து ஒதுக்கி வைத்து விடுவார்கள். அதனால் அவனது எல்லா செல்வங்களும் பெயரும், புகழும் அழிந்துவிடும். ஆகவே அவன் பல துன்பங்களை அனுபவிப்பான். இது போன்றவர்கள் இறந்த பிறகும் கூட நற்கதி அடைய மாட்டார்கள். ஆகவே நாம் நமது கோபத்தை அடக்கி ஆள வேண்டும்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா வெற்றி தோல்விகளைப் பற்றி கவலைப்படக்கூடாது என்று கூறுகிறார்கள். பிறகு மனதை அடக்கி ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். அப்படியானால் நான் போர் புரிவது ஆசையின் விளைவுதானே. ஆசைகளை நான் ஒழித்துவிட்ட பிறகு நான் ஏன் போர் புரிய வேண்டும்? உங்களின் பேச்சினால் எனக்கு குழப்பம் ஏற்படுகிறது. நான் எதை செய்தால் மேன்மை அடைவேன் என்பதை தெளிவாக கூறுங்கள்."

கிருஷ்ணர் : "அர்ஜுனா ஆசை என்பது வேறு, கடமை என்பது வேறு. கடமையை செய்யும் போது ஆசைகள் இருக்கக்கூடாது. வெற்றி அடையும் போது மகிழ்ச்சி அடையக்கூடாது. தோல்வி அடையும் போது வருத்தப்படவும் கூடாது."

"நீ உனது மனதையும் ஆசைகளையும் அடக்கிக் கொண்டு போர் புரிய வேண்டும். அவ்வாறு தன்னுடைய மனதையும் ஆசைகளையும் அடக்கிக் கொண்டு போர் செய்பவன் தான் சிறந்த வீரன். குழப்பமான மனநிலையில் போர்புரிந்தால் போரினால் உண்டாகும் விளைவுகளை

தாங்கும் சக்தி நமக்கு இல்லாமல் போய்விடும். ஆகவே நமது கடமையை செய்யும் போது நமது ஆசைகளை ஒழித்து மனதை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருக்க வேண்டும்."

20. என் தத்துவ ரகசியம்

அர்ஜுனன் : "கிருஷ்ணா, இதற்கு முன்பாக உங்கள் தத்துவங்களை நீங்கள் யாருக்கு கூறியிருக்கிறீர்கள்."

கிருஷ்ணர் : "அர்ஜுனா, நான் அழிவற்ற பல தத்துவங்களை சூரியனுக்கு சொல்லியிருக்கிறேன். அதை சூரியன் தன் மகனான மனு என்பவனுக்குச் சொன்னார். மனு தன் மகனான இஷ்வாகு மன்னனுக்குச் சொன்னார்."

"என்னுடைய இந்த தத்துவங்களும் அறிவுரைகளும் பல தலைமுறைகளாக வருகிறது. இந்த உலகத்தில் முதன் முதலாக என்னுடைய தத்துவங்களை ஷத்திரியர்கள்தான் பெற்றனர்."

"நீ என்னுடைய பக்தனும், உற்ற நண்பனும் ஆவாய். ஆகவே இந்த பழைமையான தத்துவங்களை உனக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறேன். என்னுடைய இந்த தத்துவங்களையும் அறிவுரைகளையும் ரகசியமாக காப்பாற்ற வேண்டும்."

அர்ஜுனன் : "உங்கள் தத்துவங்களையும் அறிவுரை களையும் ஏன் ரகசியமாக காப்பாற்ற வேண்டும்?"

கிருஷ்ணர் : "நல்ல அறிவைப் பெற்று நல்வழியில் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் அறிவுரைகளை கூற வேண்டும்."

"ஆணவத்தால் அறிவை இழந்தவர்கள் கொடிய எண்ணம் கொண்டவர்கள், கடவுளின் பெயரை சொல்லி ஏமாற்றுபவர்கள், பேராசை பிடித்தவர்கள், தத்துவம் பேசி ஏமாற்றுபவர்கள், அடிக்கடி பொய் பேசுபவர்கள் போன்றவர்களுக்கு என்னுடைய உபதேசங்களை கூறக்கூடாது."

"இது போன்ற மனிதர்கள் என்னுடைய போதனைகளை தெரிந்து கொண்டால், அவர்கள் என்னுடைய போதனைகளை கூறுவதுபோல நடித்து மற்றவர்களை ஏமாற்றுவார்கள். என்னுடைய போதனைகளில் இருந்து உண்மையை மறைத்துவிட்டு கீதை என்ற பெயரில் தனக்கு சாதகமான வார்த்தைகளை மட்டும் கூறுவார்கள்."

"அப்போது என்னுடைய உபதேசங்களும் அறிவுரைகளும் தவறான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே மனத்தூய்மையோடு உண்மை பேசும் மனிதர்களுக்கும், திருந்தி வாழவேண்டும் என்று எப்போதும் முயற்சி செய்து கொண்டு இருப்பவர்களுக்கும் என்னுடைய போதனைகளை கூற வேண்டும்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா, உங்களுடைய பிறப்பு அண்மையில் நிகழ்ந்தது. சூரியனுடைய பிறப்பு வெகு காலத்திற்கு முன்பு ஏற்பட்டது. அப்போது உங்கள் தத்துவங்களை எப்படி சூரியனுக்கு கூறினீர்கள்?"

கிருஷ்ணர் : "அர்ஜுனா, நான் பிறப்பற்றவன், நான் அழிவற்றவன், எனக்கு பிறப்பும் கிடையாது. அழிவும் கிடையாது. ஆனால் நானும் சாதாரன மனிதனைப் போல பிறப்பவனாகவும், இறப்பவனாகவும் தோன்றுகிறேன்."

"அர்ஜுனா எனக்கும் உனக்கும் பல பிறவிகள் கடந்துவிட்டது. அவற்றை நீ அறிய மாட்டாய், நீயும் நானும் இப்போதுதான் பிறந்து இருக்கிறோம் என்று நினைக்காதே. நான் மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன் முதலிய பல உருவங்களில் பிறந்து இருக்கிறேன். அப்போது எண்ணற்றவர்களுக்கு என்னுடைய போதனைகளை சொல்லி இருக்கிறேன். ஆரம்பத்தில் நான் நாராயணனாக இருந்து சூரியனுக்கு இந்த உபதேசங்களை சொல்லியிருக்கிறேன். அர்ஜுனா நான் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. சாதாரண மனிதர்களுக்குத்தான் அவ்வாறு தோன்றும். நான் காலத்திற்கு ஏற்றவாறு பல வித உருவங்களில் இந்த உலகில் தோன்றுவேன்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா எந்தெந்த காரணத்திற்காக நீங்கள் இந்த பூமியில் தோன்றுகிறீர்கள்?"

கிருஷ்ணர் : "பொய், கபடம், திருட்டு, கொலை மற்றும் பல அதர்ம செயல்களில் ஈடுபடுபவர்களை அழிப்பதற்கும், நல்லவர்களையும், கடவுள் பக்தர்களையும், பாதுகாப்பதற்காகவும் நான் இந்த பூமியில் அவதரிக்கிறேன்."

"அர்ஜுனா எந்த பக்தர்கள் என்னை எவ்விதம் வழிபடுகிறார்களோ நானும் அதற்கேற்றவாறு அவர்களுக்கு அருள் புரிகிறேன். மனிதர்கள் என்னை பல்வேறு

விதங்களில் வழிபடுகிறார்கள். நான் அப்போது அவர்களின் தேவைக்கேற்றவாறு அவர்களுக்கு அருள்புரிகிறேன். ஆனால் பக்தர்கள் விரும்பியதை நான் கொடுப்பது இல்லை. எனது பக்தர்களுக்கு நான் எதை செய்தால் நன்மை கிடைக்குமோ அதை நான் தகுந்த நேரத்தில் செய்வேன்."

"அர்ஜுனா அஷ்டாங்க யோகம் எனப்படும் எட்டுவித யோகங்களை அறிந்தவர்கள் சிறப்பு மிக்க பிரம்மத்தை அடைவார்கள்."

அஷ்டாங்க யோகம்

அர்ஜுனன் : "கிருஷ்ணா நான் அஷ்டாங்க யோகம் பற்றி அறிய விரும்புகிறேன்."

கிருஷ்ணர் : " 1. யமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயாமம், 5. ப்ரத்யாஹாரம், 6. தாராணா, 7. தியானம் 8. சமாதி ஆகிய எட்டு யோகங்களும் அஷ்டாங்க யோகம் ஆகும்."

"இதன் ஒவ்வொரு யோகத்திற்கும் பலவிதமான கட்டுப்பாடுகள் உள்ளன."

யமம்

"அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச் சாரியம், அபரிக்ரகம் ஆகிய ஐந்தும் யமம் எனப்படும்."

1. அகிம்சை : எந்த பிராணிக்கும் எந்த விதத்திலும்

சிறிது கூட தீங்கு செய்யாமல் இருப்பது அகிம்சை எனப்படும்.

2. சத்தியம் : நல்ல எண்ணத்துடன் கபடம் இல்லாமல் எப்போதும், இனிய சொற்களில் உண்மையை மட்டும் பேசுவது சத்தியம் ஆகும்.

3. அஸ்தேயம் : பிறருடைய உரிமைகளை பறிக்காமல் இருப்பது, பிறருடைய பொருள்களை திருடாமல் இருப்பது, பிறருடைய சொத்துக்களை அபகரிக்காமல் இருப்பது போன்ற நல்ல குணங்கள் அஸ்தேயம் எனப்படும்.

4. பிரம்மச்சாரியம் : நமது உடல் மனம், சொல், செயல் போன்றவற்றால் எந்த நிலையிலும் சிற்றின்பங்களை விரும்பாமல் மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பது பிரம்மச்சாரியம் எனப்படும்.

5. அபரிக்ரகம் : நமது உடல் பாதுகாப்புக்காக மட்டுமே பொருள்களை விரும்ப வேண்டும். ஆனால் நமது ஆசைகளுக்காக பொருள்களை விரும்பக்கூடாது. இதுவே அபரிக்ரகம் எனப்படும்.

நியமம்

ஸெளசம், சந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈஸ்வரப்ரணிதானம் போன்ற ஐந்தும் நியமம் எனப்படும்.

1. ஸௌசம் : நமது உடலையும், உள்ளத்தையும் எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்வது ஸௌசம் எனப்படும்.

2. சந்தோஷம் : சுகம், துக்கம், பிரியமுள்ளது சேருதல், பிரியமில்லாதது சேருதல் போன்ற எல்லா நேரங்களிலும் மலர்ந்த முகத்துடன் இருப்பது சந்தோஷம் ஆகும்.

3. தவம் : விரதம் இருக்க வேண்டிய நாட்களில் விரதம் இருப்பது, பூஜைகள் செய்ய வேண்டிய நாட்களில் தவறாமல் பூஜைகள் செய்வது போன்ற செயல்கள் தவம் எனப்படும்.

4. ஸ்வாத்யாயம் : மேன்மைக்கு வழிகாட்டக்கூடிய நூல்களை படிப்பது, பகவானின் பெயரைச் சொல்லி பாடுவது போன்ற செயல்கள் ஸ்வாத்யாயம் எனப்படும்.

5. ஈஸ்வரப்ரணிதானம் : எல்லாம் பகவான் செயல் என்று பகவானின் ஆணைகளை நிறைவேற்றுவது, அதற்காக நமது கடமைகளை செய்வது.

ஆசனம் மற்றும் பிராணாயாமம்

எப்படி உட்கார்ந்தால் சுகமாக இருக்குமோ அப்படியே அசைவின்றி உட்காருவது ஆசனம் எனப்படும். அப்படி அமைதியாக அமர்ந்த பிறகு மெதுவாக மூச்சை இழுத்துவிடும் பயிற்சிக்கு பிராணாயாமம் எனப்படும். முதலில் மூச்சை மெதுவாக வெளியே விட்டுவிட்டு மீண்டும் மூச்சை மெதுவாக இழுத்துவிடும் பயிற்சிக்கு பிராணாயாமம் எனப்படும். அதாவது மூச்சை மெதுவாக வெளியே விட்டுவிட்டு மீண்டும் மூச்சை மெதுவாக உள்ளே இழுத்து பிறகு சற்று நேரம் மூச்சை அடக்கி மீண்டும் மெதுவாக வெளியே விடுவது பிராணாயாமம் எனப்படும்.

குறிப்பு : இதை முறைப்படி ஒழுங்காக செய்ய வேண்டும். தவறாக செய்தால் உடல், மனம் பாதிப்பு ஏற்படும். ஆகவே பிராணாயாமம் செய்வது பற்றி நன்றாக தெரிந்தவர்களிடம் கற்றுக்கொண்டு பிராணாயாமம் செய்வது நல்லது. கீதையின் தத்துவப்படி எவ்வாறு பிராணாயாமம் செய்ய வேண்டும் என்பதை கவனிக்கவும்.

முதலில் எட்டுமுறை ஓம் என்று கூறும் கால நேரத்தில் மூச்சை மெதுவாக வெளியே விட வேண்டும்.

பிறகு பதினாறு தடவை ஓம் என்று கூறும் நேரம் வரை மூச்சை இழுக்காமல் தடுத்து நிறுத்த வேண்டும். பிறகு நான்கு தடவை ஓம் என்று கூறும் நேரத்தில் மூச்சை உள்ளுக்குள் இழுக்க வேண்டும். பிறகு பதினாறு தடவை ஓம் என்று சொல்லும் நேரத்தில் மூச்சை வெளியே விட வேண்டும். இதுவே பிராணாயாமம் எனப்படும். ஒரு வினாடியில் நான்கு ஓம்காரம் சொல்லலாம் என்று கீதையில் கூறப்படுகிறது.

குறிப்பு : பிராணாயாமம், தியானம் எப்படி செய்ய வேண்டும் என்பதை இப்புத்தகத்தின் கடைசியில் தெளிவாக பக்கம் 95ல் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை பின்பற்றி செய்யவும்.

அர்ஜுனன் : "சாதுக்கள் என்பவர் யார்?"

கிருஷ்ணர் : அகிம்சை, சத்தியம், திருடாமை, பிரம்மாச்சாரியம் முதலிய மனித தர்மங்களையும், யாகம், தீவம், கற்பித்தல், மக்களை காப்பது முதலிய நல்ல செயல்களை கடைபிடிப்பவர்களையும், பிறருக்கு நன்மை

செய்யும் இயல்பு கொண்டவர்களையும் தூய்மையான கடவுள் பக்தி உடையவர்களையும் சாதுக்கள் என்று அழைக்கிறோம்."

21. மன அடக்கம்

அர்ஜுனன் : "ஞானி என்பவர் யார்?"

கிருஷ்ணர் : பரமாத்மாவைப் பற்றிய உண்மை அறிவை பெற்றவர் ஞானி ஆவார்.

அர்ஜுனன் : "கர்மங்களை செய்வது என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "பல தலைமுறைகளாக காப்பாற்றப்பட்டு வரும் சடங்குகள், பூஜைகள், கடமைகளை தவறாமல் செய்வது கர்மங்கள் எனப்படும். மகன், தாய் தந்தையருக்கு சேவை செய்ய வேண்டும். மனைவி கணவனுக்கு சேவை புரிய வேண்டும். சிஷ்யன் குருவிற்கு சேவை புரிய வேண்டும்."

"மேலும் நமது பெரியோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சடங்குகள், விரதம், பூஜைகள் இவற்றில் குறைபாடுகள் இல்லாமல் செய்து முடிக்க வேண்டும். இதுவே கர்மங்கள் ஆகும்."

அர்ஜுனன் : "விருப்பமான பொருள் கிடைத்தால் மகிழ்வது. விரும்பத்தகாதது கிடைத்தால் வெறுப்பது என்றால் என்ன?"

கிருஷ்ணன் : "உடலுக்கும் மனதிற்கும் புத்திக்கும்

புலன்களுக்கும் விருப்பமானது கிடைத்தால் அது தனக்கு வேண்டும் என்பார்கள். அவற்றை அடைந்தால் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால் ஞானிகளுக்கு எந்த ஒரு பொருளின் மீதும் பற்று கிடையாது. ஞானிகளின் உடல், மனம், புத்தி மற்றும் புலன்களுக்கு அனுகூலமான பொருள் கிடைத்தால் அதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைவதில்லை. ஏனென்றால் அவர்களின் மனம், உடல், புலன்கள் இவற்றின் மீது பற்று கொள்வது இல்லை."

அர்ஜுனன் : "மனதை எவ்வாறு கட்டுப்படுத்துவது?"

கிருஷ்ணன் : மனம் நிலைத்து நிற்காமல் அலை பாய்ந்து கொண்டே இருக்கும். அது மதம் பிடித்த யானையைப் போல் பலம் பொருந்தியது. யானைக்கு திடீர் என்று மதம் பிடிப்பது போல நமது மனம் கர்வம் கொண்டு தவறான வழிகளில் சென்று விடுகிறது.

"நமது மனம் எதை மிகவும் விரும்புகிறதோ அதன் மீது மோகம் கொண்டு விடுகிறது. மனதை அடக்குவது என்பது காற்றை அடக்குவது போல கடினமான செயல் ஆகும்."

"கடுமையான தியானங்கள் மூலம் மனதை கட்டுப்படுத்தலாம். அப்போது ஆசன முறையில் அமைதியாக அமர்ந்து கடவுளையே நினைத்து தியானம் செய்ய வேண்டும். எல்லாம் கடவுள் செயல் என்ற எண்ணம் மனதில் நிலைக்க வேண்டும்."

அர்ஜுனன் : சன்னியாசம் என்றால் என்ன?

கிருஷ்ணன் : மனிதன் எல்லாவித ஆசைகளையும் முழுமையாக தியாகம் செய்வது சன்னியாசம் ஆகும்.

மனைவி, மக்கள், உடல், மனம், சொல், பொருள், செயல் போன்ற எல்லாவற்றிலும் உள்ள ஆசைகளை முழுமையாக துறப்பது சன்னியாசம் ஆகும். வெறுப்பு, விருப்பு இல்லாமல் தனது கர்மங்களையும் கடமைகளையும் செய்பவன் சன்னியாசிகளை விட மேன்மையானவன்.

22. என்னுடைய நண்பர்கள்

அர்ஜுனன் : "நீங்கள் எல்லா பிராணிகளுக்கும் நல்ல நண்பனாக இருப்பதாக கூறுகிறீர்கள், உங்களை உற்ற நண்பன் என்று அறிவதால் மன அமைதி எப்படி கிடைக்கும்?"

கிருஷ்ணர் : "அகில உலகிலும் எனக்கு கிடைக்காத பொருள் எதுவும் இல்லை. எதைப் பெறுவதற்காகவும் நான் யாரையும் எதிர்பார்க்கத் தேவையில்லை. என்னுடைய விருப்பம் எல்லாம் நிறைவேறிக் கொண்டே தான் இருக்கும். என் விருப்பத்திற்கு எப்போதும் எந்த தடையும் ஏற்படாது.

நான் செய்யும் கடமைகள் எல்லாம் உலகத்தின் உயிரினங்களுக்காகவே செய்து வருகிறேன். இந்த உலக நன்மைக்காகவே நான் பூமியில் தோன்றுகிறேன். எப்போதும் என்னையே நம்பிக் கொண்டு என்னை வணங்குபவர்களை நான் கைவிடுவது இல்லை. அப்படி என்னையே நம்பும் பக்தர்களின் கஷ்டங்களை நான் தாங்கிக் கொள்வதால் அவர்களுக்கு மன அமைதி கிடைக்கிறது. எனது பக்தர்களை நான் எனது நண்பர்களாகக் கருதுகிறேன். இந்த உண்மையை புரிந்து கொள்ளாதவர்கள் இன்ப

துன்பங்களின் செயல்பாடுகளால் பாதிக்கப்படுகிறார்கள். என்னைப் பற்றிய உண்மையே தெரிந்து கொண்டவனுக்கு இது போன்ற பாதிப்புகள் ஏற்படுவதில்லை. என் பக்தர்களுக்கு எது நடந்தாலும் அது எல்லாம் பகவான் செயல் என்று கருதுவதால் அவர்கள் எப்போதும் மன அமைதி உடையவர்களாக இருப்பார்கள்."

அர்ஜுனன் : "மனதை ஒரு முனைப்படுத்துவது என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "நாம் ஆசைப்படும் பொருள்களின் மீது, மனதை செலுத்தாமல், நம் மனதை பரமாத்மாவிடம் செலுத்த வேண்டும். அப்போது நம் மனம் ஒரு முனைப்படுத்தப்பட்டு தெளிவடையும்."

அர்ஜுனன் : "யோகம் பயில்வது என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "அமைதியான முறையில் அமர்ந்து நமது உள்ளம், புலன்களை தன் கட்டுப்பாட்டில் வைத்து, எப்போதும் இடைவிடாமல் பரமாத்மாவையே சிந்திப்பது யோகப் பயிற்சி ஆகும்."

அர்ஜுனன் : "தவம், தியானம் செய்வதற்கு ஏன் தனியாக அமர்ந்து இருக்க வேண்டும்?"

கிருஷ்ணன் : "காடு, மலை, குகை போன்ற இடங்கள் தவம் செய்வதற்கு ஏற்றவை. மக்கள் நடமாட்டம் உள்ள இடத்தில் நமது மன அமைதி பாதிக்கப்படும். ஆகவே தியானத்திற்கு தனிமையே சிறந்தது ஆகும்."

அர்ஜுனன் : "தியான நிலையில் இருப்பவர்களுக்கு தடையாக இருப்பது எது?"

கிருஷ்ணன் : "தூக்கம், சோம்பல், தடுமாற்றம், தட்ப வெப்பம் எல்லாம் இடையூறுகள் ஆகும். இதில் இருந்து மீள்வதற்கு தலை, உடல், கழுத்து நிமிர்ந்து இருப்பதால் சோம்பலும் தூக்கமும் நம்மை ஆட்கொள்ளமாட்டாது. மூக்கின் நுனியில் பார்வையை நிறுத்தி இருக்கவேண்டும். வெளியில் இருந்து நமக்கு தடுமாற்றங்கள் ஏற்படாது."

23. நான்கு யுகங்கள்

அர்ஜுனன் : "கிருஷ்ணா உங்களின் கால அளவு என்ன?"

கிருஷ்ணன் : "அர்ஜுனா பிரம்ம லோகம் உள்பட எல்லா உலகங்களும் அழிந்து உண்டாகக்கூடியது. பிரம்ம லோகம் ஒரு கால வரைக்குள் அழியக்கூடியது. ஆனால் எனக்கு அழிவு கிடையாது. நான் யுகங்களின் காலத்தை கடந்தவன்."

அர்ஜுனன் : பிரம்மாவின் காலம் என்றால் என்ன? யுகங்கள், தேவ யுகங்கள் முதலியவற்றை நான் அறிய விரும்புகிறேன்.

கிருஷ்ணர் : அர்ஜுனன் யுகங்கள் மொத்தம் நான்கு வகைகள் ஆகும். அவை 1. ஸத்ய யுகம், 2. திரேதாயுகம், 3. துவாபரயுகம், 4. கலியுகம் ஆகும். ஒவ்வொரு யுகத்திற்கும் கால அளவு மாறுபடும்.

1. மனிதர்களின் கணக்குப்படி சொல்ல

வேண்டுமானால் 17,28,000 ஆண்டுகள் கொண்டது ஒரு ஸத்யயுகம் ஆகும்.

2. 12,96,000 ஆண்டுகள் கொண்டது ஒரு திரேதாயுகம் ஆகும்.

3. 8,64,000 ஆண்டுகள் கொண்டது ஒரு துவாபரயுகம் ஆகும்.

4. 4,32,000 ஆண்டுகள் கொண்டது ஒரு கலியுகம் ஆகும். இப்போது நாம் வாழ்ந்து கொண்டு இருப்பது கலியுகம் ஆகும்.

இந்த நான்கு யுகமும் சேர்ந்து ஒரு சதுர்யுகம் அல்லது ஒரு தேவயுகம் எனப்படும்.

நமக்கு ஒரு ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். நமக்கு 30 ஆண்டுகள் என்பது தேவர்களுக்கு ஒரு மாதம் ஆகும். நம்முடைய 360 ஆண்டுகள் என்பது தேவர்களுக்கு ஒரு ஆண்டு காலம் ஆகும்.

இப்போது இருக்கும் பிரம்மாவின் ஆயுள் காலத்தில் பிரம்மனின் கணக்குப்படி 50 ஆண்டுகள் முடிந்துவிட்டதாக கூறப்படுகிறது. மேலும் 50 பிரம்ம ஆண்டு முடிந்தவுடன் பிரம்மா மறைந்துவிடுவார்.

"அதன் பிறகு வேறு பிரம்மாவை பகவான் உருவாக்கிவிடுவார் என்று ஞானிகள் கூறுகின்றனர்."

24. என் பக்தர்கள்

அர்ஜுனன் : "கிருஷ்ணா தங்களை வணங்கும் பக்தர் களுக்கு, அவர்கள் எதிர்பார்க்கும் நன்மைகள் முழுமையாக கிடைத்து விடுகிறதா?"

கிருஷ்ணர் : "ஒரு குழந்தை என்ன கேட்கிறது என்பதைப் பற்றி அதன் தாய் கவலைப்படுவதில்லை. குழந்தை கேட்கும் எல்லாப் பொருள்களையும் தாய் வாங்கிக் கொடுப்பதில்லை. அந்த குழந்தைக்கு எதனால் நன்மை உண்டாகுமோ அ்தைத்தான் தாய் செய்கிறாள்."

"அதே போல நானும் எனது பக்தர்கள் விரும்பும் எல்லாவற்றையும் செய்வதில்லை. எனது பக்தர்களுக்கு எந்த நேரத்தில் எதை செய்தால் நன்மை கிடைக்குமோ அதை நான் நிச்சயமாக செய்வேன். பக்தர்கள் விரும்பியபடி நான் செய்தால் அது அவர்களுக்கு தீமையாகவே முடியும்."

"ஆகவே என்னால் சிலருக்கு நன்மை கிடைக்காதது போல இருக்கும். சிலருக்கு உடனே நன்மை கிடைக்கும். சிலருக்கு தாமதமாகவே நன்மை கிடைக்கும். என்னை நம்பி வணங்கிவரும் பக்தர்களை நான் எப்போதும் கை விடுவது இல்லை."

அர்ஜுனன் : "கிருஷ்ணா உங்களுடைய அமுத மொழியை கேட்கின்ற எனக்கு இன்னும் கேட்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆகவே உங்களுடைய யோக சக்தியை மீண்டும் விரிவாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்."

25. அனைத்தும் நானே

கிருஷ்ணர் : "அர்ஜுனா நான் தேவர்களில் இந்திரனாக இருக்கிறேன். கிரகங்களில் நான் சூரியனாக இருக்கிறேன்."

"நான் எல்லா உயிரினங்களுக்கும் ஆத்மாவாக இருக்கின்றேன்."

"உயிரினங்களின் ஆரம்பமும் நானே, உயிரினங்களின் வாழ்க்கையும் நானே, உயிரினங்களின் முடிவும் நானாகவே இருக்கின்றேன். வாயு தேவர்களில் தேஜஸ் ஆகவும், சந்திரனாகவும் இருக்கின்றேன்."

"பொறிப்புலன்களில் நான் மனது ஆகவும் இருக்கின்றேன்."

"மலைகளுக்கெல்லாம் நான் இமயமலையாகவும் இருக்கின்றேன்."

"நான் ருத்திரங்களில் பரம சிவனாகவும் இருக்கின்றேன்."

"யஷர், அரக்கர் போன்றவர்களில் நான் குபேரனாகவும் இருக்கின்றேன்."

"எட்டு வசுக்களில் நான் அக்னியாகவும் இருக்கிறேன்."

"நான் எல்லா உயிரினங்களின் உணர்வு ஆகவும் ஞான சக்தியாகவும் இருக்கின்றேன்."

"புரோகிதர்களில் சிறந்தவரான பிரகஸ்பதியும் நானாகவே இருக்கின்றேன்."

"நான் மரங்களில் அரச மரம், தேவரிஷிகளில் நாரதன், சித்தர்களில் நான் கபில முனி, மனிதர்களுக்கு நான் அரசன். நான் ஸர்ப்பங்களில் வாஸுகி, நான் ஆயுதங்களில் வஜ்ராயுதம், பசுக்களில் நான் காமதேனுவாகவும் இருக்கிறேன். நான் நல்லவர்களுக்கு நல்லவனாகவும், வீரர்களுக்கு வீரனாகவும், வஞ்சகர்களுக்கு வஞ்சகனாகவும் இருக்கிறேன்."

"நான் நாகங்களில் ஆதிசேஷன், மழைக்கு அதிபதியான வருணபகவானும் நானே, நீர் நிலைகளில் நான் கடலாகவும் இருக்கிறேன். ஆயுதம் எடுத்து வருபவர்களில் ராமனாகவும், விலங்குகளில் சிங்கமாகவும், சர்வாதிகாரிகளில் நான் எமனாகவும் இருக்கிறேன்."

"நான் பறவைகளில் கருடனாகவும், மீன் இனங்களில் முதலையாகவும், நதிகளில் கங்கையாகவும் இருக்கிறேன்."

"நான் முனிவர்களில் வியாசராகவும், கவிஞர்களில் சுக்ராச்சாரியாகவும், பாண்டவர்களில் அர்ஜுனனாகவும் இருக்கின்றேன்."

"நான், மரம், செடி, கொடிகளிலும், விலங்குகளிலும், மனிதர்களிலும், பறவைகளிலும், மீன்களிலும், காற்றிலும், நெருப்பிலும், மழையிலும் முதலிய அனைத்திலும் பரவி இருக்கிறேன். என்னுடைய சக்தியினால் அனைத்து உலகையும் தாங்கி இருக்கின்றேன்."

26. விசுப ரூபம்

அர்ஜுனன் : "பகவானே உங்களைப் பற்றி பல விவரங்களைத் தெளிவாக கூறினீர்கள். உங்களின் மகா சக்திகள் அடங்கிய உங்கள் விசுவரூபத்தை நான் காண விரும்புகின்றேன்."

கிருஷ்ணர் : "அர்ஜுனா நீ எனது சிறந்த பக்தனும், சிறந்த நண்பனும் ஆவாய். ஆகவே நான் எனது விசுவரூபத்தை உனக்கு காட்டுவேன். எனது விஸ்வரூபத்தை பார்க்கும் சக்தி உனக்கு இல்லை. ஆகவே உனக்கு அந்த சக்தியை இப்போது அளிக்கிறேன்."

விளக்கம் : இவ்வாறு கூறிய கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு ஞான சக்தியை அளித்தார். அதன் பிறகு கிருஷ்ணர், ஈஸ்வரரூபம் என்றும் விராட்ரூபம் என்றும் கூறப்படுகின்ற தனது விசுவ ரூபத்தை அர்ஜுனனுக்கு காட்டினார். கிருஷ்ணர் தனது உருவத்தை பூமிக்கும் வானுக்குமாக பெருக்கிக் கொண்டு நின்றார். கிருஷ்ணரின் இந்த தோற்றம் மிகவும் பயங்கரமாக இருந்தது.

பலவித முகங்களோடும் பல கண்களோடும் பல பல ஆயுதங்களுடன், தெய்வீக ஆடைகளும், மாலைகளும் அணிந்து கொண்டு பலவித வாசனைகளுடன் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு தோற்றம் அளிக்கிறார். இதைக் கண்ட அர்ஜுனன் மிகவும் வியப்பு அடைந்து அவரை பயத்துடன் வணங்கி பேசலானான்.

அர்ஜுனன் : "பகவானே ஆகாயத்தில் ஆயிரக் கணக்கான சூரியன்கள் ஒரே நேரத்தில் ஒளி வீசினால் எப்படி இருக்குமோ அது போன்ற ஒளியை உங்களிடம் காண்கின்றேன்."

"உங்கள் திருமேனியின் ஒரு பகுதியில் தேவர்கள் நடமாடுவதை பார்க்கிறேன். மற்றொரு புரத்தில் கோடிக்கணக்கான மனிதர்களையும், விலங்குகளையும், பறவைகளையும், மேலும் பல வகையான உயிரினங்களும் தனித்தனி இடங்களில் நடமாடி திரிந்து கொண்டு இருப்பதையும் பார்க்கிறேன்."

நீர், நெருப்பு, காற்று, ஸ்வர்க்கம், பாதாளம் முதலிய அனைத்தும் தங்களின் திருமேனியில் அடங்கி இருப்பதை பார்க்கிறேன்.

"எனது பகவானே இப்போது என்னுடன் போர் செய்ய தயாராக இருக்கும் துரியோதனன் முதலான திருதராஷ்டிரனின் நூறு பிள்ளைகளில் ஒருவர் கூட மீதம் இல்லாமல் உங்களில் நுழைந்து கொண்டு இருப்பதையும் பார்க்கிறேன். மேலும் இரு படைகளிலும் உள்ள ஆயிரக்கணக்கான போர் வீரர்களும் கூட்டம் கூட்டமாக உங்கள் வாயில் நுழைந்து கொண்டு இருப்பதையும் பார்க்கிறேன்."

"கௌரவ படையின் மிக முக்கியமான வீரர்களாகிய பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்றவர்களும் உங்கள் வாயில் நுழைந்து கொண்டு இருப்பதைப் பார்க்கிறேன்."

"சிலருடைய தலைகளும், உடல்களும், தூள் தூளாகி

உங்கள் பல் இடுக்குகளில் சிக்கி இருப்பதை பார்க்கிறேன். இவ்வாறு மனிதர்கள் மட்டும் அல்லாமல் மற்ற உயிரினங்களும் தங்களின் அழிவுக்காக உங்கள் வாயில் நுழைந்து கொண்டு இருப்பதை நான் காண்கின்றேன்."

"ஆறுகள் கடலை நோக்கி பாய்ந்து வருவதைப் போல இந்த மண்ணுலக வீரர்கள் தீக்கொழுந்து வீசுகின்ற உங்கள் வாயில் புகுந்து உங்களிடமே கலந்து விடுகிறார்கள்."

"விட்டிற் பூச்சிகள் கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் தானாக வந்து விழுந்துவிடும். அதே போல் பலவித உயிரினங்களும் தங்கள் அழிவிற்காக வேகமாக ஓடி வந்து உங்களுடைய வாய்களில் நுழைகிறார்கள்."

"பகவானே தங்கள் உருவம் பூமிக்கும் ஆகாயத்திற்கும் மற்றும் எல்லா திசைகளிலும் பரவியுள்ளது. இந்த அற்புத மானதும், பயங்கரமானதுமான தங்கள் உருவத்தைக் கண்டு மூன்று உலகமும் பயந்து நடுங்குகின்றது. அவ்வாறே நானும் பயத்தால் நடுங்குகின்றேன். ஆகவே தங்களின் அழகான இனிய உருவத்தையே நான் காண விரும்புகின்றேன்."

விளக்கம் : அர்ஜுனனின் ஆசைப்படி கிருஷ்ணர் அவனுக்கு தனது விசுவரூபத்தைக் காட்டினார். மூன்று உலகங்களும் கிருஷ்ணரின் உடலில் அடங்கியிருப்பதை அர்ஜுனன் பார்த்தான். இந்த உருவத்தை பார்க்கும் சக்தியை கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அளித்தார். ஆகவே அர்ஜுனனால் மட்டும் தெளிவாக இதை பார்க்க முடிந்தது.

அர்ஜுனன் : "கிருஷ்ணா உங்களுடைய இந்த பயங்கர உருவத்தில் கௌரவ படையினரும் எங்கள்

படையை சேர்ந்த வீரர்களும் கூட என் கண்ணெதிரே அழிந்து போவதாகக் காட்டுகிறீர்கள். இந்த பயங்கர நிகழ்ச்சிகளை எனக்கு எதற்காகக் காட்டினீர்கள். அடுத்து நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்? நான் என்ன செய்ய வேண்டும்? என்பதை கூறுங்கள்."

கிருஷ்ணர் : "அர்ஜுனா, எந்த போர் வீரர்களின் அழிவு முடிவு பெற்றதோ அவர்கள் நீ போர் புரியாமல் இருந்தாலும் அழியத்தான் போகிறார்கள். இந்த இருதரப்பு வீரர்களில் யார் அழிவார்கள்? யார் பிழைப்பார்கள் என்பதையெல்லாம் நான் ஏற்கனவே முடிவு செய்துவிட்டேன். மரணம் அடையப் போகிறவர்களை யாராலும் காப்பாற்ற முடியாது. இந்த போரில் உயிர் பிழைக்கப்போகிறவர்களை யாராலும் கொல்லவும் முடியாது."

"அர்ஜுனா உனது உறவினர்களும், நண்பர்களும், பெரியோர்களும் உயிரை விடத் தயாராகி விட்டார்களே என்ற காரணத்தினால் தானே நீ போர் செய்ய மறுக்கிறாய். நீ இவர்களை கொன்றாலும் கொல்லாவிட்டாலும் இவர்கள் உயிர் பிழைக்கப் போவதில்லை. இவர்களை நானே அழிப்பது என்று முடிவு செய்துவிட்டேன். இவர்களை யாராலும் காப்பாற்ற முடியாது. ஆகவே என்னுடைய கட்டளையை ஏற்று நீ போர் புரிவது தான் நல்லது."

"அர்ஜுனா, நீ உன் பகைவர்களை வென்று இந்த நாட்டையும் செல்வத்தையும் பெற்றுக்கொள். இவர்கள் முன்பே என்னால் கொல்லப்பட்டவர்கள். ஆகவே நீ எழுந்திரு போர் செய்து உன் புகழை பெற்றுக் கொள்வாயாக."

அர்ஜுனன் : "பகவானே உங்களுடைய இனியதான மானுட வடிவைப் பார்த்து இப்போது நிலை பெற்ற மனம் கொண்டவனாகி விட்டேன். எனது மனம் தெளிவு பெற்றது. உங்களின் பக்தர்களைப் பற்றி நான் மேலும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

கிருஷ்ணர் : "எல்லா கடமைகளையும் என் பொருட்டு செய்கிறவன். என் மீது பக்தி பூண்டு ஆசைகளை ஒழித்தவன். தன்னலம் இல்லாமல் எல்லோரிடமும் அன்பு காட்டுபவன் எல்லா உயிரினங்களின் மீதும் அன்பு காட்டுபவன். இன்ப துன்பங்களை சமமாக கருதுபவன். ஒருவன் தெரியாமல் செய்யும் குற்றங்களை பொறுத்து அவர்களுக்கு நன்மையை தொடர்ந்து செய்பவன் போன்றவர்கள் எல்லாம் என்னுடைய பிரியமான பக்தர்கள் ஆவார்கள்."

27. குற்றங்கள்

அர்ஜுனன் : "கிருஷ்ணா எத்தகைய குற்றங்கள் மன்னிக்கப்பட தக்கவை? மன்னிக்கபடக்கூடாத குற்றங்கள் எது?"

கிருஷ்ணர் : "குற்றங்கள் 1. விரும்பாமை, 2. இயலாமை ஆகிய இரண்டு வகைகளில் நடைபெறுகிறது."

"விரும்பாமை : ஒருவன் பேராசையின் காரணத்தால் தான் விரும்பிய பொருள் கிடைக்க வேண்டும் என்றும், தான் நினைத்த செயல்தான் நடக்க வேண்டும் என்றும் நினைப்பது குற்றம் ஆகும். இது போன்றவர்கள் தனது

எண்ணம் நிறைவேற வேண்டும் என்பதற்காக, பொய் சொல்லுதல், ஏமாற்றுதல், திருடுதல், தீ வைத்தல், கொலை செய்தல், பொய் பிரசாரம் செய்தல், கபட நாடகம் ஆடுதல் போன்ற குற்றங்களில் ஈடுபடுவார்கள்."

"இது போன்ற பேராசை பிடித்தவர்கள் தனது குற்றத்தில் இருந்து விடுபடுவதற்கு விரும்புவதில்லை. இவர்கள் நீதி, நேர்மை, தர்மம் முதலிய நல்ல பண்புகளை விரும்பி ஏற்கவில்லை. இவர்கள் நினைத்து இருந்தால் இந்த குற்றங்களில் இருந்து விடுபட்டு இருக்கலாம். ஆகவே இவர்களின் விரும்பாமையினால் குற்றம் புரிபவர்கள் எனப்படுவர். ஆகவே தர்ம நெறிகளை விரும்பாமையினால், செய்யும் குற்றத்திற்கு மன்னிப்பு கிடையாது. இதுவே விரும்பாமை எனப்படும் குற்றம் ஆகும்."

"இயலாமை : பசி, நோய், உயிருக்கு ஆபத்து போன்ற கொடுமையான நிலைகள், தனக்கோ அல்லது தன்னைச் சேர்ந்தவர்களுக்கோ ஏற்படும் போது, அந்த மனிதன் பொய் சொல்லுதல், திருடுதல், ஏமாற்றுதல் போன்ற குற்றங்களை தற்காலிகமாக தனது இயலாமையால் செய்தல் அது குற்றம் ஆகாது. உயிருக்கு ஆபத்தான நிலையில் வேறு வழியில்லாமல் செய்யப்படும் சிறு குற்றங்கள் மன்னிக்கப்படலாம்."

"ஒருவன் விறகுக்காக ஒரு பெரிய மரத்தை வெட்டுகிறான். அப்போது அந்த மரம் அவனுக்கே தெரியாமல் ஒரு மனிதன் மீதோ அல்லது வேறு ஒரு உயிரினங்களின் மீதோ விழுந்து விடுகிறது. அந்த மரத்தை வெட்டியவன் அந்த உயிரை காப்பாற்ற நினைக்கிறான்.

ஆனால் அந்த உயிரை அவனால் காப்பாற்ற முடியவில்லை. இது போன்ற பாவங்கள் இயலாமையின் காரணமாக நடந்து விடுகிறது."

"இது மன்னிக்க தகுந்த குற்றம் ஆகும்."

"ஒருவன் தான் செய்யும் வேலைகள் நல்லதாக தான் முடியும் என்று நினைக்கிறான். ஆனால் அந்த செயல் அவனின் விருப்பத்திற்கு மாறாக நடந்துவிடும் போது அது பாவம் ஆகாது. அந்த மனிதனின் இயலாமையால் அந்த பாவத்தில் இருந்து விடுபட முடியவில்லையென்றால் அது குற்றம் ஆகாது. இதுவே இயலாமை ஆகும். இயலாமையினால் நடக்கும் குற்றம் மன்னிக்கப்படலாம். இதுவே இயலாமை எனப்படும் குற்றமாகும்."

"தன்னுடைய உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக மற்றொரு உயிரை கொல்லுதல், தனது துன்பங்களை போக்கிக் கொள்வதற்காக மற்றவர்களை துன்பப்படுத்துவது போன்றவை சுய நலத்தால் செய்யப்படும் குற்றங்களாகும். தன்னுடைய சுய நலத்திற்காக திட்டம் போட்டு செய்யும் குற்றங்கள் பெரும் பாவம் ஆகும். இவைகள் மன்னிக்கத்தகாத குற்றங்கள் ஆகும்."

நமது விளக்கம் : நாம் செய்யும் குற்றங்களை நாம் நேரடியாக செய்தாலும் குற்றம். அல்லது நம்மால் உண்டாக்கப்படும் குற்றங்களும் நமது குற்றமே ஆகும்.

1. நாமே நேரடியாக செய்யும் குற்றம்.

2. குற்றம் செய்பவருக்கு உடந்தையாக இருப்பதும் குற்றம்.

3. குற்றம் புரிவதற்கு திட்டம் தீட்டுவதும் ஒரு குற்றம்.

4. குற்றம் புரிய முயற்சிப்பதும் குற்றம்.

5. குற்றவாளிகளுக்கு ஆயுதம், மற்ற பொருள்களை கொடுப்பது ஒரு குற்றம்.

6. குற்றம் நடைபெறுவதற்கு வசதியாக பேசுவதும், செயல்படுவதும் குற்றம்.

7. குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதும் குற்றம்.

8. குற்றம் புரிய முயற்சி செய்து அதில் தோல்வி அடைந்தாலும் அதுவும் குற்றம்.

9. குற்றம் நடப்பது தெரிந்தும் அதை தடுக்க சக்தி இருந்தும் கண்டு கொள்ளாமல் இருப்பதும் ஒரு குற்றம்.

10. குற்றவாளிகள் அந்த குற்றத்தில் இருந்து தப்பித்து செல்வதற்கு உதவி செய்வதும் ஓர் குற்றம் ஆகும்.

ஒருவன் தான் செய்து விட்ட குற்றங்களுக்காக மனம் உருகி வருந்துவதும், தான் செய்து விட்ட பாவங்களில் இருந்து விடுபடுவதற்கு கடும் முயற்சி செய்வது போன்ற செயல்கள் செய்பவர்களை மன்னிக்கவும்.

ஒருவனுக்கு நாம் வெளிப்படையாக தெரியும்படி தீமைகள் செய்வது குற்றம் ஆகும்.

ஒருவனுக்கு நாம் மறைமுகமாக தீமைகள் செய்தால் அது பாவம் ஆகும்.

குற்றங்களுக்கும், பாவங்களுக்கும் கிடைக்கும்

நியாயமான தண்டனைகளை நாம் முழு மனதுடன் விரும்பி ஏற்றுக் கொண்டால், அப்போது நாம் அந்த குற்றத்தில் இருந்தும் பாவத்தில் இருந்தும் விடுபடலாம்.

அர்ஜுனன் : "கார்யம், காரணம் என்ற சொற்கள் என்ன தத்துவத்தை கூறுகின்றன. அவற்றை உண்டாக்குவதில் பிரக்குருதிதான் காரணம் என்று கூறுவதன் கருத்து என்ன?"

கிருஷ்ணர் : "நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி என்ற ஐம்பெரும் பூதங்கள், ஒளி, ஓசை, சுவை, ஊறு, நாற்றம் போன்ற ஐந்தும் ஆக மொத்தம் பத்தும் கார்யங்கள் ஆகும். மனம், புத்தி, அகங்காரம் இவை மூன்றும் காரணங்கள் ஆகும். கண், காது, சருமம், நாக்கு, மூக்கு போன்றவை அறிவு புலன்கள் ஆகும். கை, கால், வாக்கு போன்றவை சொற்புலன்கள் ஆகும்."

மேற்கண்ட அனைத்து தத்துவங்களும் ப்ரக்ருதியில் இருந்து உண்டானவையாகும்.

அர்ஜுனன் : ப்ருக்ருதியானால் உண்டாகும் குணங்கள் எவை?

கிருஷ்ணர் : சத்வகுணம், ரஜோகுணம், தமோ குணம் ஆகியவை ப்ரக்ருதியில் இருந்து உண்டானவை. இந்த மூன்று குணங்களும் அழிவில்லாத ஜீவாத்மாவை நமக்கு உணர்த்துகிறது.

28. மூன்று வித குணம்

அர்ஜுனன் : "சத்வகுணம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "சத்வகுணம் தூய்மையானது. அதில் எந்தவிதமான மாசும் கிடையாது. ஆகவே அது நம்மை பிரகாசப்படுத்துகிறது. இது விகாரம் அடைவது இல்லை. ஆகவே நமது உள்ளத்திலும், புலன்களிலும் ஒளி கூடுகிறது."

"துக்கம், தடுமாற்றம், தீய செயல்கள், தீய குணங்களை நம்மை விட்டு அழிகின்றது. ஆகவே நமக்கு அமைதி கிடைக்கிறது."

நமது சத்வ குணம் பெருகுமானால் மனதில் உள்ள சஞ்சலம் தானாக நீங்கிவிடும். நமது உள்ளத்தில் உள்ள எல்லா புலன்களிலும் உள்ள துக்கமும், சோம்பலும் அகன்று விழிப்புணர்வு வளர்கிறது.

அர்ஜுனன் : "ரஜோகுணம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : ஆசைகளினாலும், பற்றுதல்களாலும் ரஜோகுணம் உண்டாகிறது. அதே போல ரஜோ குணத்தினால் ஆசையும் பற்றும் உண்டாகிறது. விதையும் மரமும் போல இவை ஒன்றுக்கொன்று தொடர்பு உடையவை. விதையினால் மரம் உண்டாகிறது. மரத்தில் இருந்து விதை கிடைக்கிறது.

"இருந்தாலும் விதையை உண்டாக்கக்கூடிய மரம் விதையினால் தான் உண்டாகிறது. ஆகவே மரம் உண்டாவதற்கு காரணமும் விதைதான். அந்த மரத்தில் இருந்து விதை உண்டாகுவதற்கு காரணமும் விதைதான். ஆகவே ஆசை பற்று இவைகளுக்கு மூலகாரணம் ரஜோகுணம் ஆகும்."

அர்ஜுனன் : "தமோகுணம் எப்படிப்பட்டது?"

கிருஷ்ணர் : "நமது உள்ளத்திலும் புலன்களிலும் உள்ள அறிவையும் சக்தியையும் இழக்கச் செய்து மயக்கத்தை உண்டாக்கக்கூடியது தமோகுணம்."

"நமது உடலில் நாம் நமது என்ற அபிமானம் கொண்ட மனிதர்களுக்கும், பிராணிகளுக்கும், அதன் உள்ளங்களில் ஒருவித மயக்கம் ஏற்படுகிறது."

"அப்போது மனிதர்கள் உள்பட எல்லா உயிரினங்களுக்கும் தானே உயர்ந்தவர்கள் என்று கருதுகிறார்கள். ஆனால் தன் நிலையில் நியாயமாகவும், உறுதியாகவும் இருப்பவர்களுக்கு இது போன்ற பாதிப்பு ஏற்படுவது இல்லை."

"மன உறுதி இல்லாதவர்களை தமோ குணம் வென்றுவிடும். உறுதியான மனமும் அறிவும் உள்ளமும் கொண்டவர்கள் தமோ குணத்தை வென்று விடுவார்கள்."

"அர்ஜுனா மூன்று வித குணங்களில் ஏதாவது ஒரு குணம், மற்ற இரண்டு குணங்களை வென்றுவிடும். அவரவர்களின் மனவுறுதியை பொறுத்து இவ்வாறு குணங்கள் மாறுபடுகிறது."

அர்ஜுனன் : "ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அழுத்திவிட்டு சத்வ குணம் மேலோங்குவது எப்படி?"

கிருஷ்ணர் : "ரஜோ குணம், தமோ குணங்களின் செயலை தடுத்து சத்வ குணம் தன் செயலை தொடங்கும் போது, உடல், மனம், புலன்கள் எல்லாவற்றிலும், விவேகம், வைராக்கியம், பிரகாசம் ஆகியவை அதிகரித்து அந்த மனிதன் சுகமாகவும் அமைதியாகவும் இருக்கிறான்."

"அப்போது ரஜோகுணத்தின் விளைவுகள் ஆன, பேராசையின் செயல்களில் ஈடுபாடு, தீய பழக்கங்கள் போன்றவையும் அழிந்துவிடும். மேலும் தமோ குணத்தின் விளைவுகளான தூக்கம், சோம்பல் கவன குறைவு போன்றவைகளும் அழிந்துவிடும்."

"இவ்வாறு சத்வகுணம் மற்ற இரண்டு குணங்களான ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அழித்து விடுவதால், நமக்கு ஞானம், பிரகாசம், சுகம் முதலிய நல்ல தன்மைகள் கிடைக்கிறது. இதுதான் ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அழுத்தி சத்வகுணம் மேலோங்குவது ஆகும்."

அர்ஜுனன் : "சத்வ குணத்தையும், தமோ குணம் இவற்றின் செயல்களை தடுத்த ரஜோ குணம் தன் இயக்கத்தைத் தொடங்கும் போது, நமது உடல், புலன்கள், உள்ளம், இவற்றில் தடுமாற்றம், அமைதியின்மை, பேராசை போன்ற விளைவுகள் உண்டாகிறது."

"அப்போது சத்வ குண விளைவுகளான, பிரகாசம்,

விவேக சக்தி, அமைதி போன்றவையும், தமோ குணத்தின் விளைவுகளான தூக்கம், கவனமின்மை, சோம்பல் முதலியவையும் அழுத்தப்படுகிறது. இதுதான் சத்வ, தமோ குணங்களை அழுத்தி ரஜோகுணம் மேலோங்குவது ஆகும்."

அர்ஜூனன் : "சத்வ, ரஜோ குணங்களை அடக்கி, தமோ குணம் மேலோங்குவது எப்படி?"

கிருஷ்ணர் : "சத்வ ரஜோ குணங்களின் செயல்பாடுகளை தடுத்து தமோ குணம் தனது செயலைத் தொடங்கும் போது, உடல், புலன்கள், உள்ளம் இவற்றில் ஆசைகள் உண்டாகிறது."

"அப்போது தேவையில்லாத செயல்களில் ஈடுபாடு உண்டாகிறது. ஆகவே செயல்கள் பயனற்றதாக ஆகிவிடுகிறது. அப்போது சத்வ குணத்தின் செயல்களான அறிவும், ஒளியும் ரஜோ குணங்களில் செயல்களான கர்மங்களில் ஈடுபாடு, இன்பங்களை அனுபவிப்பதில் விருப்பம் இல்லாதது போல் காணப்படுகிறது. இதுதான் சத்வ, ரஜோ குணங்களை அடக்கி தமோ குணம் மேலோங்குவது ஆகும். நமது உள்ளமும் உடலும் தூய்மை அடைந்து ஞானம் உண்டாகும் போது சத்வகுணம் மேலோங்கி நிற்கும்."

அர்ஜூனன் : "பயம், அபயம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "நாம் எதை நினைத்து பயந்து கொண்டு இருக்கிறோமோ அந்த செயல் நல்லபடியாக முடிந்துவிட்டால் அது அபயம் எனப்படும். நமக்கு

விருப்பமானது நம்மை விட்டு பிரிந்து விடுமோ, தேவையில்லாத பிரச்சினைகள் வந்து சேர்ந்து விடுமோ, நம்மை யாராவது திட்டுவார்களோ, நமது புகழுக்கு தீங்கு வந்து விடுமோ, நமக்கு நோய் வந்து விடுமோ, பேய், பிசாசு, பூதம், நம்மை பிடித்து விடுமோ, மரணம் வந்து விடுமோ என்று தேவையில்லாமல் எப்போதும் குழப்பமாக இருப்பது பயம். இந்த எண்ணங்கள் நம்மை பாதிக்காமல் இருந்தால் அது அபயம் எனப்படும்."

அர்ஜுனன் : "ஹோமம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "தாய், தந்தை, பெரியோர்கள், கடவுள், தேவதைகள், அந்தணர்கள், விருந்தினர்கள் போன்றவர்களை பூஜித்து வணங்குவது ஹோமம் எனப்படும்."

அர்ஜுனன் : "அகிம்சை என்றால் என்ன?"

"ஆசை, கோபம், விரோதம், லாபம் போன்ற காரணங்களால் எந்த உயிரினங்களுக்கோ, மனிதர்களுக்கோ எந்த வித தீங்கும் செய்யாமல் இருப்பது அகிம்சை ஆகும்."

"எங்கும், எப்போதும், நம்மாலும் அல்லது வேறு யார் மூலமாகவும் தீங்கு செய்யக்கூடாது. அவ்வாறு தீங்கு செய்பவர்களுக்கு உதவி செய்வது, அவர்களின் செயலை சரியென்று ஒப்புக்கொள்வதும் குற்றம் ஆகும்."

"நல்லவர்களை குற்றவாளி என்று கூறுவது, கலகம், பொய் பிரசாரம் செய்வது, பெண்கள், சிறுவர்கள், அப்பாவிகள், மனநிலை சரியில்லாதவர்கள், நோயாளிகள்

மிகுந்த வறுமையில் உள்ளவர்கள் போன்றவர்களைப் பற்றி தவறான கருத்துக்களை கூறுவது, தன்னை நாடி வந்தவர்களை அவமானப்படுத்துவது போன்றவை மிகுந்த பாவச் செயல்கள் ஆகும்."

29. தம்பம், அசாபலம்

அர்ஜுனன் : "அசாபலம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "தேவையில்லாமல் பேசிக் கொண்டு இருப்பது, பயனில்லாத விஷயங்களை சிந்தித்துக் கொண்டு இருப்பது, தேவையில்லாமல் கைகால்களை ஆட்டுவது, கைகளை பின்னாலோ அல்லது முன்னாலோ கட்டிக் கொண்டு நிற்பது, கால்களில் பூமியை கிளறுவது, துரும்பை கிள்ளுவது, தேவையில்லாமல் தலை சொறிவது போன்ற குணங்கள் அசாபலம் ஆகும். நமது மனதடுமாற்றங்களால் இது போன்ற செயல்கள் ஏற்படுகிறது."

அர்ஜுனன் : "எது தம்பம் எனப்படுகிறது?"

கிருஷ்ணர் : "தற்பெருமை, கௌரவம், மதிப்பு, இவற்றிற்காகவும், பேராசையினால் பிறரை ஏமாற்றும் எண்ணத்தினாலும், தன்னை கடவுள் பக்தன், ஞானி, மஹாத்மா என்றெல்லாம் விளம்பரப்படுத்துவதும், கொடையாளி போல காட்டிக் கொள்வதும், பக்தி, விரதம், தியானம் போன்றவற்றை சிறப்பாக செய்வது போல் காட்டிக் கொள்வது போன்ற செயல்களால் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வது தம்பம் எனப்படும்."

30. தர்பம்

அர்ஜுனன் : "தர்பம், அபிமானம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "ஜாதி, மதம், வயது, பலம், கல்வி, செல்வம், குடும்பம், இன்பம் போன்றவற்றால் பிறரை தாக்கிப் பேசி அவமானப்படுத்துவது தர்ப்பம் எனப்படும். நான் சிறந்தவன், பெரியவன், பெயருக்கு உரியவன். தனக்கு கிடைக்கும் பெயரும் புகழும் தனக்குரியவைதான் என்று தற்பெருமை அடைவது அபிமானம் ஆகும்."

அர்ஜுனன் : "அஞ்ஞானம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "தனது அறிவின்மையால், எது தர்மம், எது அதர்மம், எது உண்மை, எது பொய் என்று புரியாமல் தவறான செயல்களில் ஈடுபடுவது, தவறான தீர்ப்பை சொல்வது போன்றவை அஞ்ஞானம் எனப்படும்."

அர்ஜுனன் : "மனோரதம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "அசுர குணம் படைத்தவர்கள், செல்வம், வீடு, மனைவி, மக்கள் பெருமை போன்றவற்றால் ஆணவம் மிகுந்து பேசுவார்கள். என்னிடம் செல்வமும் அதிகாரமும் சேர்ந்துவிட்டது. நான் விரும்பும் பொருளை அடைந்தே தீருவேன். என்னால் முடியாதது எதுவும் இல்லை என்று பல்வேறு மனக்கோட்டை கட்டுவார்கள். இதுவே மனோரதம் எனப்படும்."

31. பலவகை தானம்

அர்ஜுனன் : "அசுர புத்தி உள்ளவர்களின் குணம் எப்படி இருக்கும்?"

கிருஷ்ணர் : "அசுர புத்தி உடையவர்கள், அகங்காரம், பலம், கர்வம், காமம், விரோதம், ஆடம்பரம், பேராசை போன்ற தீய குணம் படைத்தவர்களாக இருப்பார்கள்."

''இவர்கள் நாமே ஈஸ்வரன், நாமே பலம் உடையவர்கள், நாமே வெற்றிகளைப் பெறுவோம். நாமே இன்பத்தை அடைவோம். நம்மால் முடியாதது எதுவும் இல்லை என்ற கர்வம் கொள்வார்கள்."

"ஆணவத்தால் பிறரிடம் அடிக்கடி பகை கொண்டு அவர்களை அடித்து துன்புறுத்துவார்கள். தன்னை எதிர்த்து யாரும் எதுவும் பேசக்கூடாது என்று நினைப்பார்கள். நீதி, நியாயம், தர்மம் முதலிய எதைப் பற்றியும் இவர்கள் கவலைப்பட மாட்டார்கள்."

அர்ஜுனன் : "தானம் எத்தனை வகையில் செய்யப் படுகிறது?"

கிருஷ்ணர் : "தானம் செய்வது நம் கடமை என்று நினைத்து எந்தவிதமான தானம், எந்த நேரத்தில் கொடுக்க வேண்டும் என்றும், தானம் பெறுபவர்களின் நலனை மனதில் கொண்டும், பிரதிபலன் எதிர்பார்க்காமல் சுயநலம் கருதாமல் கொடுக்கப்படும் தானம் சிறப்பு மிக்க சாத்வீக தானம் எனப்படும்."

மன வருத்தத்தோடும், கைமாறு கருதியும், தானம் கொடுப்பதால் கிடைக்கும் பயனை கருதியும் கொடுக்கப்படும் தானம் ராஜஸம் எனப்படும்.

"எந்த தானம் மரியாதை இன்றி இகழ்ச்சியோடு, தகாத இடத்திலும், தகாத காலத்திலும், தகுதி அற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டால் அது தாமசம் எனப்படும்."

அர்ஜுனன் : "எப்படிப்பட்டவர்களுக்கு தானம் கொடுக்கக் கூடாது?"

கிருஷ்ணர் : "கபட வேஷம் போட்டிருப்பவன், பிறருக்கு துன்பத்தை கொடுப்பவன், அடுத்தவர்களைத் தகாத வார்த்தைகளால் குறை கூறுபவன், பொய் பிரசாரம் செய்கிறவன், பிறர் வாழ்க்கையை கெடுத்து வாழ்பவன், போலியான மரியாதை கொடுப்பவன், திருடுபவன், ஏமாற்றுபவன், சூதாடுபவன், நயவஞ்சகன் போன்றவர்களுக்கு தானம் கொடுக்கக்கூடாது."

"அப்படிப்பட்டவர்களுக்கு தானம் கொடுப்பதால், தானம் கொடுப்பவனுக்கு மிகுந்த பாவம் ஏற்பட்டு நரகத்தை அடைவான். ஆனால் பசியில் உள்ளவன், ஆடையற்றவன், நோயாளி போன்றவர்கள் அது யாராக இருந்தாலும், அவர்களுக்கு உணவு, உடைகள், மருந்துகள் போன்றவற்றைக் கொடுக்கலாம். அவ்வாறு கொடுப்பதால் கொடுப்பவனுக்கு நன்மையே உண்டாகும்."

"நாம் செய்யும் வேள்விகள், தவம், பூஜைகள் போன்ற செயல்களை நாம் சிரத்தையுடன் செய்ய வேண்டும். நமக்கு சிறிதும் கஷ்டம் இல்லாமல் நல்ல காரியம் செய்தால் அதை செய்பவர்களுக்கு பயனை அளிக்காது."

"எந்த மனிதன் கர்மத்தை வெறுப்பதில்லையோ, எந்த மனிதன் பலனை எதிர்பார்க்காமல் கர்மத்தை செய்கிறானோ அவனே உண்மையான தியாகியும் அறிஞனும் ஆவான்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா தர்மம், அதர்மம் என்றால் என்ன?"

கிருஷ்ணர் : "தானம், தவம், அகிம்சை, இரக்கம், சத்தியம், அமைதி, பொறுமை, வேள்வி, பூஜை, மக்களை காப்பது, கற்பது, அடுத்தவருக்குக் கல்வி கற்பிப்பது, நல்ல போதனைகளைக் கூறுவது, தனது கடமைகளை ஒழுக்கத்துடன் செய்வது போன்றவை தர்ம செயல்கள் ஆகும்."

"பொய், திருட்டு, கபடம், கர்வம், உயிரினங்களுக்கு துன்பத்தைக் கொடுப்பது, உண்ணத்தகாத பொருள்களை உண்ணுதல், கடமை தவறி நடத்தல், குற்றம் புரிபவனுக்கு ஆதரவு அளித்தல் போன்றவை அதர்ம செயல்கள் ஆகும்.

32. தர்ம நெறிகள்

அர்ஜுனன் : "கிருஷ்ணா தர்மம் எத்தனை வகைகளில் பின்பற்றப்படுகிறது? பகவானே இதைப் பற்றி தெளிவாக அறிய விரும்புகிறேன்."

கிருஷ்ணர் : "அர்ஜுனா தர்மங்கள் 1. சத்தியம், 2. தயை, 3. சாந்தி, 4. அகிம்சை ஆகிய நான்கு வகைகளில் பின்பற்றப்படுகிறது."

சத்தியம் : "தாய், தந்தையரின் விருப்பத்தை நிறைவேற்றுதல், தெய்வ நம்பிக்கை, பொய் சொல்லாதிருத்தல், இனிய பேச்சு, கடமையை..செய்தல், பெரியோர்களுக்கு பணிவிடை செய்தல், விரதம், பூஜைகள் செய்தல், உடலும் மனமும் தூய்மையாக இருத்தல், தேவைக்கு அதிகமாக விரும்பாமல் இருத்தல், தீய காரியத்தில் வெட்கப்படுதல் போன்றவை சத்தியம் ஆகும்."

தயை : "பொது வேலைகளில் ஈடுபாடு, தானம் செய்தல், பிறருக்கு உதவி புரிதல், பணிவு, இன்முகத்துடன் பேசுதல், தன்னை எளியவன் என்று கருதுதல், பேதம் இல்லாமல் பழகுதல் போன்றவை தயை ஆகும்."

சாந்தி : "பயன் இல்லாத புண்படும் பேச்சுகளை பேசாது இருத்தல், அடுத்தவர் மனம் புண்படும்படி பேசாது இருத்தல், பொறுமை, மன உறுதி, மன அமைதி, விருந்தினரை உபசரித்தல், பிறர் குற்றம் பாராது இருத்தல், புலன் அடக்கம் சிறிது கிடைத்தாலும் விரும்பி ஏற்றுக் கொள்ளுதல், கடவுள் வழிபாட்டில் ஈடுபாடு, எதிலும் பயமின்மை, ஆசை இன்மை, தூய உள்ளம், செய்யக்கூடாத செயல்களை செய்யாமல் இருத்தல், இன்பத்திலும், துன்பத்திலும் அமைதியாக இருத்தல், பிறருடைய நல்ல குணங்களைப் பாராட்டுதல், திருடாமை, பொது அறிவு, துறவு மனப்பான்மை, பொறாமை அடையாமல் இருத்தல், கோவில்களுக்கு சென்று வருதல் போன்றவை சாந்தி எனப்படும்."

அகிம்சை : "எந்த உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்காமல் இருத்தல், மாமிசம் உண்ணாதிருத்தல்,

விருந்தோம்பல், எப்போதும் அமைதியாக மலர்ந்த முகத்துடன் இருத்தல், எல்லோரும் நம்மவர் என்று எண்ணுதல் போன்ற குணங்கள் அகிம்சை எனப்படும்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா ஒவ்வொரு யுகத்திலும் தருமம் எந்த அளவிற்கு கடைபிடிக்கப்பட்டது?"

கிருஷ்ணர் : "அர்ஜுனா ஒரு குதிரை நடப்பதற்கும் ஓடுவதற்கும் அதன் நான்கு கால்கள் பயன்படுகிறது. அந்த குதிரையின் கால்களில் காயம் ஏற்பட்டால் அந்த குதிரை சரியாக ஓடாது."

சத்திய யுகம் : சத்திய யுகத்தில் தருமம் என்ற குதிரைக்கு நான்கு கால்களும், ஆரோக்கியமாக இருந்தது. அப்போது வாழ்ந்த மக்கள் தர்மத்தை முழுமையாக கடைபிடித்து வந்தனர்.

திரேதாயுகம் : இந்த திரேதாயுகத்தில் தர்மம் என்ற குதிரைக்கு மூன்று கால்கள் மட்டும் ஆரோக்கியமாக இருந்தது. அப்பொழுது வாழ்ந்த மக்களிடம் தருமம் சற்று குறைவாக இருந்தது.

துவாபாரயுகம் : இந்த யுகத்தில் தர்மம் என்ற குதிரைக்கு இரண்டு கால்கள் மட்டும் ஆரோக்கியமாக இருந்தது. மக்களிடம் தருமம் பாதியாக குறைந்துவிட்டது.

கலியுகம் : கலியுகத்தில் அந்த குதிரைக்கு ஒரு கால் மட்டுமே ஆரோக்கியமாக இருக்கும். ஆகவே, இப்போது தருமம் மிகக் குறைந்த அளவே இருக்கிறது.

குறிப்பு : இப்போது நாம் வாழ்ந்து கொண்டு இருப்பது கலியுகம் ஆகும்.

33. நான்கு வர்ணங்கள்

அர்ஜுனன் : "கிருஷ்ணா வர்ணங்கள் எத்தனை வகைகளில் எப்படி பிரிக்கப்படுகிறது?"

கிருஷ்ணர் : மனிதர்களின் விரதம், பூஜைகளின் கடமைகள், மனஉறுதி, குணம், தொழில் போன்ற அடிப்படையில் வர்ணங்கள் பிரிக்கப்படுகிறது. அவை 1. பிராமணர், 2. க்ஷத்திரியர், 3. வைசியர், 4. சூத்திரர் ஆகியவை ஆகும். இந்த ஒவ்வொரு வர்ணத்தினருக்கும் சில கடமைகளும் விதிமுறைகளும் விதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளையும், விதிமுறைகளையும் ஒழுங்காக செய்துவிட்டால், அவர்கள் சிறப்புமிக்க மனிதனாக கருதப்படுவான்.

பிராமணன் : சத்வகுண இயல்புகளை அதிகமாகக் கொண்டவன் பிராமணனாகக் கருதப்படுவான். உடலையும், உள்ளத்தையும், தூய்மையாக வைத்து இருத்தல், மன அடக்கம், புலனடக்கம், தர்மத்தைக் கடைபிடித்தல், தர்மங்களை கடைபிடிப்பதற்காக துன்பங்களை பொறுத்துக் கொள்ளுதல். மனம், புலன், உடல் இவற்றில் நேர்மை, பிறர் குற்றம் பொறுத்துக் கொள்ளுதல், வேதம், சாஸ்திரம், கடவுள், பரலோகம் இவற்றில் முழு நம்பிக்கை வைத்தல், தான் கற்ற வேதங்களையும், சாஸ்திரங்களையும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தல், அரசனுக்கும், பொது மக்களுக்கும் அறிவுரைகள் கூறுதல், சடங்குகள் [illegible] நட்சத்திரங்களின் அவசியத்தை எடுத்துக் –

மக்களுக்காகவும், உயிரினங்களுக்காகவும், பூஜைகள் செய்து அவர்களின் நன்மைக்காக கடவுளை வேண்டிக் கொள்ளுதல் போன்ற பண்புகளை உடையவன் பிராமணன் ஆவான்.

ஒருவன் பிராமண குலத்தில் பிறந்து விடுவதால் மட்டும் அவன் பிராமணனாக ஆவதில்லை. பிராமண குலத்தின் பண்புகளை கடைபிடிப்பவனே பிராமணன் ஆவான். இவ்வாறு ஒழுக்கங்களை கடைபிடிக்கும் பிராமணர்கள் வணங்கத்தக்கவர்கள்.

ஷத்திரியன் : சத்வ குணம் கலந்த ரஜோ குணம் மிகுந்தவன் ஷத்திரியன் ஆவான். வீரம், மன உறுதி, திறமை, உயிருக்கு பயப்படாமல் போர் செய்வது, தான தர்மங்கள் செய்வது, ஆட்சி புரியும் திறமை, பொது மக்களை பாதுகாப்பது, திருடர்கள், கொலைகாரர்கள், கொடிய மனிதர்கள், கொடிய மிருகங்கள் போன்றவர்களை அழிப்பது, அதர்மத்தை எதிர்த்து நியாயத்திற்காக போராடுவது போன்றவை ஷத்திரியர்களின் குணம் ஆகும். இவ்வாறு ஷத்திரிய தர்மங்களை கடைபிடிப்பவனே உண்மையான ஷத்திரியன் ஆவான். நிலங்களை பராமரித்து விவசாயம் புரிவது ஷத்திரியர்களின் முக்கிய தொழில் ஆகும்.

ஷத்திரியர்களுக்கு ரஜோ குணம் இயற்கையாகவே உண்டு என்பதால் அவர்களுக்கு மனதிடம் மற்றும் இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைகளும் இருக்கும். இவர்களிடம் சத்வ குணமும் கலந்து இருப்பதால் நீதி, நேர்மை, தர்மம் போன்ற நல்ல குணங்களும் இருக்கும்.

வைசியன் : தமோ குணம் கலந்த ரஜோ குணம் மிகுந்தவன் வைசியன் ஆவான். மனிதர்களுக்கும், தேவர்களுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான பொருள்களை நியாயமான விலையில் வாங்குவதும், மீண்டும் அவற்றை நியாயமான விலையில் விற்பதும் வைசியர்களின் கடமை ஆகும். இது தவிர விவசாயம் செய்து நெல், கோதுமை, வேர்க்கடலை, கேழ்வரகு, கம்பு, சோளம், உளுந்து, பயறு வகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதும் பசுக்களை மேய்ப்பது, அதற்கு உணவு கொடுப்பது, கொடிய மிருகங்களிடம் இருந்து அவற்றை பாதுகாப்பது, இவற்றில் இருந்து கிடைக்கும் பால், தயிர், நெய் போன்றவற்றை விற்பது வைசியர்களின் கடமையாகும்.

சூத்ரன் : ரஜோ குணம் கலந்த, தமோ குணம் மிகுந்தவன் சூத்ரன் ஆவான்.

பிராமணன், ஷத்திரியன், வைசியன், போன்றவர்களுக்குத் தேவையான சேவைகளை செய்வது சூத்ரன் கடமையாகும். அவர்கள் கூறும் வேலைகளை செய்வது, வீடுகளின் நீர் நிரப்புவது, விவசாயத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவது, கால்நடைகளுக்கு தேவையான உணவுகளை அளிப்பது, கால்நடைகளை பாதுகாப்பது, பொருள்களை பாதுகாப்பது, மேலும் இந்த மூன்று வர்ணத்தாருக்கும் பலவித பணிவிடைகளை செய்வது சூத்ரனின் கடமை ஆகும்.

விளக்கம் : மனிதர்கள் அவர்களின் வர்ணத்திற்கு ஏற்றவாறு தனது கடமைகளை செய்தனர். அவ்வாறு

செய்வது அவர்களின் வழக்கமாக இருந்ததால் அவரவர்களின் வேலைகள் அவரவர்களுக்கு கடுமையாக இருப்பதில்லை.

சூத்ரர்கள் அப்பாவிகளாக கருதப்பட்டனர். ஆகவே அவர்கள் செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு உண்டு. ஒழுக்கமுள்ள சூத்திரன் பிராமணனைக் காட்டிலும் மேன்மையானவனாக கருதப்படுவான். ஏனென்றால் ஒழுக்கம் என்பது பிராமணர்களின் முக்கிய கடமையாகும். ஆகவே பிராமணர்கள் ஒழுக்கமாக இருப்பது ஒரு வியப்பான விஷயம் இல்லை.

34. தற்பெருமைகளின் விளைவு

அர்ஜுனன் : "கிருஷ்ணா நீங்கள் இங்கே எனக்கு பல உபதேசங்களைக் கூறி, என்னை போருக்குத் தூண்டுகிறீர்கள். அங்கே துரியோதனன் கர்வம் கொண்டு தன்னுடைய பெருமைகளை கூறிக்கொண்டு இருக்கிறான்."

கிருஷ்ணர் : "அசுர புத்தி உடையவனுக்கு அழிவு காலம் வந்து விட்டால் தற்பெருமை பேசுவான். தனக்கு வரப்போகும் அழிவை அவன் உணரவில்லை. அவனுடைய அழிவு காலம் நெருங்கிவிட்டது. ஆகவே தான் தற்பெருமை பேசிக்கொண்டு இருக்கிறான். அர்ஜுனா தற்பெருமை என்பது தற்கொலைக்கு சமம். ஆகவே அந்த துரியோதனனைப் பற்றி நீ கவலைப்படாதே."

நமது விளக்கம் : அர்ஜுனனின் வில் காண்டீபம் என்று அழைக்கப்படும் - காண்டீபம் என்னும் அந்த வில்லை

யாராவது அவமதித்து பேசினால் அவர்களை நான் கொன்று விடுவேன் என்று அர்ஜுனன் சபதம் எடுத்து இருக்கிறான்.

அர்ஜுனனின் அண்ணனாகிய யுதிஷ்டிரன் ஒரு முறை அந்த காண்டீபத்தை பற்றி தரக்குறைவாக பேசி விட்டான். ஆகவே அர்ஜுனன் தனது அண்ணனைக் கொல்வதற்கு தனது வில்லை எடுத்துக் கொண்டான். அதை கிருஷ்ணர் தடுத்தார். அதற்கு அர்ஜுனன், கிருஷ்ணா எனது காண்டீபத்தை யார் குறை கூறினாலும் அவர்களை நான் கொன்றுவிடுவேன் என்று சத்தியம் செய்து இருக்கிறேன். ஆகவே நான் எனது மூத்த அண்ணன் யுதிஷ்டிரனை கொன்றுதான் ஆக வேண்டும்.

அதற்கு கிருஷ்ணர் "அர்ஜுனா நீ உனது அண்ணனை தரகுறைவான வார்த்தைகளால் திட்டிவிடு, அப்படி திட்டினால் அது கொன்றதற்கு சமம் ஆகிவிடும்" என்று கூறினார். அதன் பிறகு அர்ஜுனன் யுதிஷ்டிரனை தகாத வார்த்தைகளால் கண்டபடி திட்டிவிட்டான். அவ்வாறு திட்டி விட்ட பிறகு அர்ஜுனன் மிகவும் மனவருத்தம் அடைந்தான்.

அர்ஜுனன் கூறினான் "கிருஷ்ணா, எனது பாசத்திற்குரிய அண்ணனை நான் கண்டபடி திட்டிவிட்டேனே, இதற்கு மேல் என்னால் உயிரோடு இருக்கமுடியாது, இப்போதே நான் தீயை மூட்டி தற்கொலை செய்து கொள்வேன்" என்று அர்ஜுனன் தற்கொலை செய்து கொள்வதற்காக தயாரானான். அப்போது கிருஷ்ணர் அர்ஜுனனைத் தடுத்தார்.

கிருஷ்ணர் கூறினார் "அர்ஜுனா, நீ உன்னை பற்றி தற்பெருமைகளைப் பேசு. உன்னுடைய பெருமைகளை யெல்லாம் எடுத்துக்கூறி ஆணவமாக தற்கொலை செய்து கொண்டதற்கு சமம் ஆகும். அதன் பிறகு அர்ஜுனன் தன்னைப் பற்றி தற்பெருமைகளை எடுத்துக் கூறினான். கடைசியில் அர்ஜுனனும், யுதிஷ்டிரனும் மன ஆறுதல் அடைந்து ஒற்றுமையாக ஆனார்கள்."

ஒருவனை தரக்குறைவாக பேசுவது அவனை கொல்வதற்கு சமம் என்றும், ஒருவன் தற்பெருமை பேசுவது அவனின் தற்கொலைக்குச் சமம் என்றும் கிருஷ்ணன் அப்போது அர்ஜுனனுக்கு கூறினார்.

35. மனம் தெளிவு

அர்ஜுனன் : "கிருஷ்ணா, உங்களிடம் உபதேசம் பெற்றுக் கொண்ட எனக்கும் உங்கள் பக்தர்களுக்கும் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?"

கிருஷ்ணர் : "நான் சொன்ன இந்த ரகசியமான கீதை உபதேசங்களை கேட்க விரும்பாதவனுக்கும், பக்தி இல்லாதவர்களுக்கும், என்னிடம் குறை காண்பவர் களுக்கும் கூறக்கூடாது."

கீதா உபதேசங்களை தெரிந்து கொண்டவர்கள் அதை என்னுடைய பக்தர்களுக்கு கூற வேண்டும். அவ்வாறு கீதையை கூறுபவர்களுக்கு எப்போதும் என்னுடைய அருள் கிடைக்கும். அர்ஜுனா நம் இருவருக்கும் நடந்த

இந்த தர்மம் மிகுந்த உரையாடலை எவன் படிக்கிறானோ அவன் என்னையே பூஜிக்கிறான். இதை நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் இதை எந்த மனிதன் கேட்கிறானோ அவன் எல்லா பாவங்களில் இருந்து விடுதலை பெறுவான்.

"அர்ஜுனா நீ உன் மனதை ஒருமுகப்படுத்தி என் உபதேசங்களை கேட்டுக் கொண்டாயா? அஞ்ஞானம் என்ற உன்னுடைய மயக்கம் நீங்கியதா?"

அர்ஜுனன் : "கிருஷ்ணா, எனது பகவானே உங்கள் அருளால் எனது மன மயக்கம் அழிந்தது, என்னுடைய குழப்பங்கள் எல்லாம் நீங்கி விட்டன. உங்கள் அறிவுரையை நான் ஏற்றுக் கொண்டேன். நீங்கள் என்க்கு கட்டளை இடுங்கள் அதன்படியே நடப்பேன்."

கிருஷ்ணர் : "அர்ஜுனா நீ எனது பக்தன். என்னை நீ சரண் அடைந்து விட்டதால், நீ செய்யும் செயல் அனைத்தையும் என்னிடம் சமர்ப்பித்துவிடு அப்போது உன்னை பாவங்கள் சேராது. ஆகவே நீ போர் புரியாமல் இருக்காதே. நீ போர் புரிய மாட்டேன் என்று மறுத்தாலும் இயற்கை உன்னை தூண்டிவிடும். ஆகவே அர்ஜுனா நீ உனது வில்லாகிய காண்டீபத்தை கையில் எடுத்துக் கொண்டு, போருக்குத் தயாராக எழுந்து நில்."

அர்ஜுனன் : "கிருஷ்ணா உங்களின் கட்டளைப்படியே நான் போருக்குத் தயாராகிவிட்டேன்."

36. கீதையின் முடிவு

அஸ்தினாபுரம் இவ்வாறு போர் தொடங்குவதற்கு முன்பாக அர்ஜூனனுக்கும் கிருஷ்ணருக்கும் நடந்த உரையாடலை சஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு சொல்லிக் கொண்டு இருந்தான். சஞ்சயன் திருதராஷ்டிரனிடம் சொன்னான். "அரசே பகவான் கிருஷ்ணருக்கும், அர்ஜூனனுக்கும் நடந்த அந்த அற்புதமான உரையாடலை கேட்டு எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது."

"எனக்கு வியாசரின் அருள் கிடைத்ததால் நான் இதை நன்றாக பார்க்கவும் கேட்கவும் முடிந்தது. மன்னா யோகேஸ்வரனான கிருஷ்ணரும், காண்டீபம் ஏந்தி நிற்கும் அர்ஜூனனும் எங்கே இருக்கின்றனரோ அங்கே நீதியும் தர்மமும், வெற்றியும், அனைத்து செல்வங்களும் நிலைத்து நிற்கும். இதில் எந்த வித சந்தேகமும் இல்லை. அரசே நீங்கள் உங்கள் நலனை விரும்பினால் உங்கள் புதல்வர்களுக்கு அறிவுரை கூறி பாண்டவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு நன்மைகள் உண்டாகட்டும்."

குறிப்பு : சஞ்சயனின் இந்த வார்த்தையுடன் பகவத் கீதை முடிவு பெறுகிறது.

37. போர் தொடங்கியது

கிருஷ்ணரின் உபதேசங்களைக் கேட்டு அர்ஜுனனின் மனம் மிகவும் தெளிவு பெற்றது. ஆகவே அர்ஜுனன் தனது வில்லாகிய காண்டீபத்தை கையில் ஏந்திக்கொண்டு மன உறுதியுடன் போருக்கு தயாராக நின்றான்.

அதன் பிறகு கிருஷ்ணர் தனது சங்கை ஊதினார். அதைத் தொடர்ந்து பாண்டவர் படைகளில் பலரும் தங்கள் சங்க நாதங்களை ஊதினார்கள். அதைத் தொடர்ந்து கௌரவர்களும் தங்களுடைய சங்குகளை ஊதினார்கள். பிறகு போர் தொடங்கியது. வில், அம்பு, கத்தி, ஈட்டி, கதாயுகம் போன்ற ஆயுதங்களை ஏந்திக் கொண்டு, பல ஆயிரக்கணக்கான வீரர்கள் பெரும் ஆரவாரத்துடன், கூச்சல் போட்டுக் கொண்டு ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டனர்.

விளக்கம் : நாங்கள் போருக்கு தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவிப்பதற்காக சங்குகளை ஊதியும், பல போர் முரசுகளை அடித்தும், போர் தொடங்குவார்கள்.

இந்த மகாபாரத போர் மொத்தம் 18 நாட்கள் நடைபெற்றது. அர்ஜுனனுக்கும் மற்ற பாண்டவர்களுக்கும், கிருஷ்ணர் அவ்வப்போது தகுந்த ஆலோசனைகளை கூறி வந்தார்.

38. கிருஷ்ணரின் கடமை

அதர்மத்தை அழித்து தர்மத்தை பாதுகாப்பது கிருஷ்ணரின் கடமை. கிருஷ்ணருக்கு கௌரவர்கள் மீது எந்த பகையும் இல்லை. அவருக்கு பாண்டவர் மீது மட்டும் பாசம் இல்லை. அவருக்கு எல்லோரும் சமமானவர்கள்தான்.

பாண்டவர்களின் பக்கம் நியாயம் இருந்ததால் அவர் பாண்டவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார். இந்த போரின் மூலம் உலக மக்களுக்கு தர்ம நியாயங்களை உணர்த்துகிறார். ஆகவே கிருஷ்ணர் பாண்டவர்களை வெற்றி அடைய செய்கிறார்.

பாண்டவர்களின் வெற்றிக்காக கிருஷ்ணர் பலவித சூழ்ச்சிகளை செய்கிறார். பீஷ்மர், துரோணர், கர்ணன், துரியோதனன் போன்றவர்களை கிருஷ்ணரின் சூழ்ச்சியால் பாண்டவர்கள் வென்றனர். கிருஷ்ணர் இல்லையென்றால் அவர்களை பாண்டவர்களை தோற்கடிப்பது மிகவும் கடினம்.

39. பீஷ்மர் வீழ்ச்சி

கங்காதேவிக்கும், சந்தனு ராஜாவிற்கும் பிறந்தவர் பீஷ்மர். இவர் பரசுராமனிடம் போர் பயிற்சிகளை கற்றவர். ஒருமுறை அவர் பரசுராமரையும் தோற்கடித்துவிட்டார். பீஷ்மரை வெல்லக்கூடிய ஒரு வீரன் இருபடைகளிலுமே இல்லை. போர்க்களத்தில் பீஷ்மரின் வேகத்தைக் கண்டு பாண்டவர் படைகள் எல்லாம் சிதறி ஓடியது. பாண்டவர் படையில் உள்ள பல வீரர்களை பீஷ்மர் கொன்று குவித்தார்.

அப்போது கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார், அர்ஜுனா நமது படையில் உள்ள சிகண்டி என்ற வீரன் முற்பிறவியில் பெண்ணாக இருந்தவன். அவன் பீஷ்மரை கொல்வதற்காகவே பிறந்தவன். ஆகவே அந்த சிகண்டியை உன்னுடன் தேரில் நிறுத்திக் கொண்டு நீ பீஷ்மரின் மீது அம்புகளை விடு என்றார்.

அதன் பிறகு சிகண்டியை அர்ஜுனன் தனது தேரில் நிறுத்திக் கொண்டு பீஷ்மரின் மீது அம்புகளை விட்டான். சிகண்டி முன் பிறவியில் பெண் என்று பீஷ்மருக்குத் தெரியும். ஆகவே பெண்ணின் மீது அம்பு படக்கூடாது என்று பீஷ்மர் நினைத்தார். ஆகவே பீஷ்மர் அர்ஜுனனை எதிர்த்து அம்புகளை விடவில்லை. ஆனால் அர்ஜுனன் பீஷ்மர் மீது அம்புகளை விட்டு அவரை கொன்றான். இவ்வாறு கிருஷ்ணரின் சூழ்ச்சியால் பீஷ்மரை அர்ஜுனன் வென்றான்.

40. துரோணர் வீழ்ச்சி

பீஷ்மரைப் போலவே துரோணரும் பாண்டவர் படைகளை கொன்று குவித்தார். இவரை கொல்வதற்காக கிருஷ்ணர் பாண்டவர்களிடம் சில சூழ்ச்சிகளை கூறினார். அதன் பிறகு பீமன் அசுவத்தாமன் என்ற யானையை கொன்றுவிட்டு வந்தான்.

துரோணரின் மகன் பெயர் அசுவத்தாமன் ஆகும். யானையைக் கொன்ற பீமன் அசுவத்தாமனை கொன்று விட்டேன் என்று கத்திக் கொண்டே வந்தான். தனது மகன் மீது மிகுந்த பாசம் கொண்ட துரோணர் யுதிஷ்டிரனிடம் கேட்டார். யுதிஷ்டிரரும் துரோணரிடம் பொய் சொல்லிவிட்டார்.

தனது மகன் அசுவத்தாமன் இறந்துவிட்டதாக நினைத்து துரோணர் தனது ஆயுதங்களை போட்டுவிட்டு தேரில் அமைதியாக அமர்ந்துவிட்டார். அப்போது திருஷ்டத்யூமனன் என்பவன் துரோணரின் தலையை வெட்டி சாய்த்தான். இந்த திருஷ்டத்யுமனன் துரோணரை கொல்வதற்காகவே பிறந்து வந்தவன். துரோணருக்கு தன் மகன் மீது உள்ள பாசத்தால் அப்போது ஆயுதங்களை கீழே போட்டுவிடுவார் என்றும், அப்போது திருஷ்டத்யூமனன் அவரை கொன்றுவிடுவான் என்றும் கிருஷ்ணருக்குத் தெரியும். ஆகவே கிருஷ்ணர் பாண்டவர்களிடம் அந்த சூழ்ச்சிகளைக் கூறினார். இவ்வாறு கிருஷ்ணரின் சூழ்ச்சியால் துரோணர் மாண்டார்.

41. கர்ணன் வீழ்ச்சி

கர்ணனிடம் அரவக்கனை என்னும் கொடிய நாகம் இருந்தது. இதை கர்ணன் அர்ஜுனனின் மீது ஏவினான். அப்போது கிருஷ்ணர் அர்ஜுனனின் தேரை கீழே அழுத்திவிட்டார். ஆகவே அர்ஜுனன் உயிர் பிழைத்தான். ஒரு முறை கர்ணனின் தேர்ச் சக்கரம் பூமியில் புதைந்துவிட்டது. அப்போது கர்ணன் அந்த தேர்ச்சக்கரத்தை தூக்கிக் கொண்டு இருந்தான். நியாயப்படி அப்போது அர்ஜுனன் கர்ணன் மீது அம்புகளை விடக்கூடாது.

அப்போது கிருஷ்ணர் கூறினார், அர்ஜுனா இதுதான் தக்க சமயம் இப்போது நீ கர்ணன் மீது அம்புகளை விடு. இதை நீ செய்யாவிட்டால் அதன் பிறகு கர்ணனை உன்னால் கொல்லவே முடியாது என்று கூறினார். பிறகு தேர்ச்சக்கரம் தூக்கிக் கொண்டு இருந்த கர்ணன் மீது அர்ஜுனன் அம்புகளை விட்டுக் கொன்றான்.

42. துரியோதனன் வீழ்ச்சி

மாபெரும் பலசாலியான பீமன் துரியோதனனின் 99 தம்பிகளையும் கொன்றுவிட்டான். கடைசியாக துரியோதனனுடன் போர் புரிந்தான். பீமன் துரியோதனன் இருவருமே சிறந்த கதாயுத வீரர்கள்.

இந்த இருவருமே சமபலத்துடன் போர் புரிந்தனர். பீமன் துரியோதனனை கடுமையாக தாக்கியும் பீமனால் துரியோதனனை கொல்ல முடியவில்லை. அப்போது கிருஷ்ணர் தனது தொடையை தட்டிக் காட்டினார். இதை புரிந்து கொண்ட பீமன் துரியோதனனின் தொடைகளை தாக்கினான். அதனால் துரியோதனனின் தொடைகள் உடைந்து மாண்டான். இவ்வாறு துரியோதனனும் கிருஷ்ணரின் சூழ்ச்சியால் இறந்தான்.

இந்த மகாபாரத போரில், கௌரவப் படையைச் சேர்ந்த ஜயத்ரதன், சல்லியன், சகுனி, பகதத்தன், சால்வன், சம்சப்தர்கள், பூரிசிரவஸ், போன்றவர்களும் பாண்டவர் படையை சேர்ந்த அபிமன்யு, கடோத்கஜன், சிகண்டி, துருபதன் திருஷ்டத்யூமனன் போன்றவர்களும் மாண்டனர். மேலும் பல ஆயிரக்கணக்கான போர் வீரர்களும், யானைகளும் குதிரைகளும் போரில் மாண்டன.

குறிப்பு : பீஷ்மர், துரோணர், கர்ணன், துரியோதனன் போன்றவர்களை கிருஷ்ணன் தனது சூழ்ச்சியால் கொன்ற பிறகு அவர்களை நல்ல சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தார். ஆகவே கிருஷ்ணரால் இவர்களுக்கு நல்லது தான் நடந்தது. மேலும் தன் கடமையை ஒழுக்கத்துடன் செய்து போரில் வீர மரணம் அடைந்தவர்களை எல்லாம் கிருஷ்ணர் நல்ல சொர்க்கலோகம் அனுப்பினார்.

43. தேர் வெடித்துச் சிதறியது

இந்த மகாபாரத போர் மொத்தம் பதினெட்டு நாட்கள் நடந்தது. கடைசியாக பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். போர் முடிந்த பிறகு அர்ஜுனனின் தேரில் உள்ள கொடியில் இருந்து ஆஞ்சநேயர் பறந்துவிட்டார். அதன் பிறகு கிருஷ்ணர் அர்ஜுனனை தேரில் இருந்து இறங்கும்படி கூறினார். அப்போது அர்ஜுனனின் மனதில் ஆணவம் இருந்தது.

அர்ஜுனன் கூறினான் "கிருஷ்ணா, நான் ரதவீரன் நீங்கள் தேர் ஓட்டுபவர் ஆகவே நீங்கள் தான் முதலில் இறங்க வேண்டும்" என்றான். அப்போது கிருஷ்ணர் கூறினார். "அர்ஜுனா, நீ போரில் வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்து ஆணவமாக பேசுகிறாய். அர்ஜுனா இப்போது நீ முதலில் தேரில் இருந்து இறங்க வேண்டும். இதை நீ மறுத்தால் வீணாக அழிந்து விடுவாய்" என்று கூறினார்.

அதன் பிறகு அர்ஜுனன் தனது தவறை உணர்ந்து கீழே இறங்கினான். அர்ஜுனன் இறங்கிய பிறகு கிருஷ்ணர் தேரில் இருந்து கீழே இறங்கினார். கிருஷ்ணர் கீழே இறங்கியதும் அந்த தேர் பயங்கர சப்தத்துடன் வெடித்துச் சிதறியது. பிறகு தேர் முழுவதும் எரிந்து சாம்பலாகிவிட்டது. இதைக் கண்ட அர்ஜுனனும் மற்ற பாண்டவர்களும் அதிர்ச்சி அடைந்தனர். பிறகு அவர்கள் கிருஷ்ணரிடம்

சென்று பகவானே "இந்த தேர் ஏன் இப்படி வெடித்துச் சிதறியது?" என்று கேட்டனர்.

கிருஷ்ணர் பேசினார் "பாண்டவர்களே பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்ற மாவீரர்கள் பல சக்தி வாய்ந்த ஆயுதங்களை இந்த தேரின் மீது வீசினார்கள். அதையெல்லாம் நான் எனது சக்தியால் தாங்கிக் கொண்டு இருந்தேன். சக்தி மிக்க ஆஞ்சநேயரும், அர்ஜுனனின் கொடியில் இருந்து பறந்துவிட்டார். ஆகவே நான் தேரில் இருந்து இறங்கிய உடன் தேர் எரிந்துவிட்டது. அர்ஜுனனுக்கு முன்பாக நான் இறங்கி இருந்தால் இந்த தேருடன் சேர்ந்து அர்ஜுனனும் அழிந்து இருப்பான்."

44. யுதிஷ்டிரன் அரசன் ஆனான்

போர் முடிந்ததும் பாண்டவர்களும், கிருஷ்ணரும், அஸ்தினாபுரத்து அரண்மனைக்கு சென்றனர். அங்கு பாண்டவர்களின் தாய் ஆகிய குந்தி கௌரவர்களின் தாய் தந்தையாகிய காந்தாரி, திருதராஷ்டிரன் மற்றும் விதுரன் போன்றவர்களை பாண்டவர்கள் வணங்கினார்கள். பாண்டவர்களின் மூத்தவன் யுதிஷ்டிரன். அந்த யுதிஷ்டிரனுக்கு அஸ்தினாபுரத்து அரசனாக முடிசூட்டப் பட்டது.

குறிப்பு : இவ்வாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காப்பாற்றினார். இதை உலக மக்களுக்கு ஒரு பாடமாக கிருஷ்ணர் உணர்த்தினார். கீதையும் முடிந்து மகாபாரத போரும் முடிவு பெற்றுவிட்டது.

45. கீதையின் பொன் மொழிகள்

கிருஷ்ணர், அர்ஜுனனுக்கு கூறிய உபதேசங்களின் முக்கிய பகுதி.

1. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

எது நடந்துகொண்டு இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

2. நீ எதை கொண்டு வந்தாய் இழப்பதற்கு

நீ எதை படைத்து இருந்தாய் அழிப்பதற்கு, நீ எதை பெற்றாயோ அது இங்கிருந்தே பெறப்பட்டது.

3. இன்று உன்னுடையது எதுவோ அது நாளை வேறு ஒருவனுடையது.

கிருஷ்ணரின் விளக்கம் - 1

அர்ஜுனா உலகத்தில் நடந்துவிட்ட செயல்களும், இப்போது நடந்துகொண்டு இருக்கிற செயல்களும், இதற்கு பிறகு நடக்க போகிற செயல்களும் என்னுடைய செயல்கள். இந்த என்னுடைய செயல்கள் அனைத்தையும் நான் நன்றாகவே செய்து வருகிறேன்.

நீ உன்னுடைய கடமையை ஒழுங்காகவும், நியாயமாகவும், மன உறுதியோடும் செய். அவ்வாறு உன்னுடைய கடமையை செய்வது மட்டும்தான் உன்னுடைய வேலை. அதனால் உண்டாகும் பலனைப் பற்றி நீ கவலைப்படாதே.

கிருஷ்ணரின் விளக்கம் - 2

அர்ஜுனா நீயோ அல்லது வேறு எந்த மனிதனோ தான் பிறக்கும் போது எதையும் கொண்டு வருவதில்லை. மனிதன் இந்த உலகத்திற்கு வரும் போது வெறும் உடலை மட்டும்தான் கொண்டு வருகிறான்.

மனிதனின் செல்வம், புகழ், உறவினர்கள், நண்பர்கள், முதலிய அனைத்தும் என்னால் படைக்கப்பட்டது. அப்படி இருக்கும் போது உன்னுடையது என்று நீ எதை அழிக்கப் போகிறாய்.

அர்ஜுனா நீ எதை பெற்றுக் கொண்டாயோ அது எல்லாம் இங்கிருந்தே எடுக்கப்பட்டது. இந்த உலகத்தில் எதுவும் உன்னுடையது அல்ல, எல்லாம் என்னால் உருவாக்கப்பட்டது.

கிருஷ்ணரின் விளக்கம் - 3

அர்ஜுனா இங்கே எவையெல்லாம் உன்னுடையது என்று நினைக்கிறாயோ அவையெல்லாம் நாளைக்கு வேறு ஒருவனுடையது. ஆகவே நான் எனது என்ற அகந்தையை அழித்துவிடு.

46. தியானம்

நமது மனம் ஆனது எப்போதும் எதையாவது சிந்தனை செய்து கொண்டே இருக்கும். மேலும் எதைப்பற்றியும் தெளிவான முடிவுகளை செய்ய முடியாமல் ஒருவித தடுமாற்றம் ஏற்படும். இதனால் எந்த வேலையையும் ஒழுங்காக செய்ய முடியாது. இதற்கு என்ன காரணம் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

1. பிடிக்காத விஷயத்தை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு இருப்பது.

2. சிறிய விஷயத்தை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு இருப்பது.

3. சந்தேகம், பொறாமை, கோபம், வெட்கம், பயம் போன்ற உணர்ச்சிகள் அதிகம் ஆகும் போது அது மனநோய் (பைத்தியம்) ஆக மாறிவிடும். ஆகவே தியானம் செய்யவும்.

அளவுக்கு அதிகமான ஆசை (பேராசை) தேவையில்லாத வீண் பயம், எப்போதும் தேவையில்லாமல் பேசிக்கொண்டு இருப்பது, தற்பெருமை என்பது ஆணவமாகப் பேசுவது, சவால் விடுவது போன்ற தீய பழக்கங்களை விட்டு விடுங்கள். நமது மனதை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொண்டால் தீய பழக்கங்கள் நம்மை விட்டுப் போய்விடும்.

தினமும் தியானப் பயிற்சி செய்வதன் மூலம் நமது மனதை கட்டுப்படுத்தலாம்.

தியானம் செய்யும் முறை

1. காலையில் 15 நிமிடமும், மாலையில் 15 நிமிடமும் தியானம் செய்வது போதுமானது.

2. காலையில் குளித்து முடிந்தவுடன் கடவுள் படத்தின் அருகே அமருங்கள்.

3. எப்படி உட்கார்ந்தால் சுகமாக இருக்குமோ அப்படி உட்காருங்கள். அதாவது தவம் செய்வது போல நிமிர்ந்து உட்கார வேண்டும்.

4. கடவுளை வணங்கிவிட்டு லேசாக கண்களை மூடிக் கொள்ளவும்.

5. கண்களை மூடிக்கொண்டு உங்கள் பார்வையை அதாவது உங்கள் கவனத்தை இரண்டு கண்களுக்கு இடையில் உள்ள நெற்றிக்கண் என்னும் பகுதியில் கொண்டு செல்லவும். கடவுளை மனதில் நினையுங்கள்.

6. லேசாக மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டு இருக்கவும். ஆனால் மூச்சை முழுமையாக இழுத்து, முழுமையாக வெளியிடவும். மூச்சை சிரமத்துடன் இழுத்து விடக்கூடாது.

7. தொடர்ந்து கண்களை மூடியவாறே அமர்ந்து இருக்கவும். உங்கள் கவனம் நெற்றிக் கண்ணில் இருக்க வேண்டும்.

8. உங்களை சுற்றிலும் ஏற்படும் சப்தங்களை கேட்டுக் கொண்டே இருங்கள். சில நாட்களுக்கு பிறகு இந்த சப்தங்கள் உங்களுக்குப் பழகி விடும்.

9. உங்களை சுற்றிலும் இருந்துவரும் சப்தங்களை பற்றி நீங்கள் கவலைபடாதீர்கள். பிறகு நாளடைவில் இந்த சப்தங்கள் உங்கள் காதுக்கு கேட்காது.

10. இவ்வாறு தினமும் அமர்ந்து கடவுளை மட்டுமே மனதில் நினையுங்கள். வேறு எதைப்பற்றியும் சிந்திக்காமல் அமைதியாக இருங்கள்.

சுமார் 10 முதல் 20 நிமிடம் வரை தியானம் செய்யலாம். இவ்வாறு தியானம் செய்து முடிந்தவுடன் மீண்டும் கடவுளை வணங்கிவிட்டு எழுந்து உங்கள் அடுத்த வேலைகளை கவனிக்கலாம்.

குறிப்பு : இவ்வாறு காலை, மாலை இரண்டு வேலையும் தியானம் செய்வதால், மனம் தூய்மை அடைந்து தெளிவடையும். பிறகு மனமும் உடலும் புத்துணர்ச்சி அடையும்.

47. பிராணயாமம்

தண்ணீர், உணவு இவற்றை விட நமது உடலுக்கு முக்கியமாக பயன்படுவது தூய்மையான காற்று ஆகும். ஆகவே பிராணயாமம் பயிற்சி நமக்கு தேவைப்படுகிறது. தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் பிராணயாமம் செய்தால் நமது உடலும் உள்ளமும் தூய்மை அடையும்.

<u>பிராணயாமம் செய்யும் விதம்</u>

1. தியான நிலையில் அமருவது போல் அமரவும்.
2. கட்டை விரலால் மூக்கின் இடது பக்கத்தை மூடிக்கொண்டு மூக்கின் வலது துவாரம் வழியாக காற்றை இழுக்கவும். இவ்வாறு காற்றை இழுப்பதற்கு சுமார் 4 வினாடி நேரம் எடுத்துக் கொள்ளவும்.
3. பிறகு காற்றை 8 வினாடி நேரம் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
4. பிறகு வலது துவாரத்தை கட்டை விரலால் மூடிக்கொண்டு இடது துவாரம் வழியாக மூச்சை விடவும். மூச்சை விடுவதற்கு 8 வினாடி நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.
5. மூக்கின் வலது துவாரத்தை மூடிக்கொண்டு இடது துவாரம் வழியாக 4 வினாடி நேரம் காற்றை இழுக்க

வேண்டும். பிறகு 8 வினாடி நேரம் மூச்சை அடக்க வேண்டும்.

6. பிறகு இடது துவாரம் வழியாக 8 வினாடி நேரம் மூச்சை வெளியே விட வேண்டும். இவ்வாறு மூக்கின் இடப்பக்கம் இரண்டு முறை, வலப்பக்கம் இரண்டு முறை செய்யவும்.


குறிப்பு : பிராணயாமம், தியானம், யோகாசனம் போன்றவற்றை பலரும் பலவிதமாக கூறுகின்றனர். ஆகவே பெரியவர்கள் மற்றும் விவரம் தெரிந்தவர்களிடம் கேட்டு இது போன்ற பயிற்சிகளை செய்யவும். குறிப்பாக சிறுவர்கள் கவனமாக இருக்க வேண்டும். தவறான பயிற்சிகளால் ஆபத்து நேரிடும் என்பதை அறியவும்.

<u>முடிவுரை :</u>

இந்த பகவத் கீதை புத்தகத்தை பலமுறை படித்து நல்ல விஷயங்களை தெரிந்து கொள்ளுங்கள். இதை முழுமையாக படித்தால் தான் பல ஆன்மீக புத்தகங்கள் உங்களுக்கு புரியும். கீதையை படிப்பவருக்கும், கேட்பவருக்கும் என்றென்றும் ஸ்ரீ கிருஷ்ணரின் அருள் கிடைக்கும்.

நன்றி !

வணக்கம்.



பகவத் கீதை

கதைகள்

கீதா சாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

